# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

நவம்பர் 2006 ஜீவியம் 12 மலர் 7

## இம்மாத மலரில்..........

பொருளடக்கம்

பக்கம்


| | |
|---|---|
| உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம் | 2 |
| இம்மாதச் செய்தி | 9 |
| லைப் டிவைன் | 10 |
| பிரியம் | 14 |
| நிலையான நிதர்சனம் | 16 |
| உலகத்தின் தலைமை | 23 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 25 |
| அருளாகி அமுதமாகி.... | 29 |
| யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள் | 55 |
| அன்பர் கடிதம் | 60 |
| சாவித்ரி | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-

## ஜீவியத்தின் ஓசை

✡ **மனதின் அமைதி மனதை பொருத்ததே தவிர பிரச்சினை-யைப் பொருத்ததில்லை.**

**பிரச்சினை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அடங்கும் மனம் அடங்கும்; அடங்காத மனம் அடங்காது.**

✡ **எண்ணங்கள் தலையெடுக்கா-மல் மௌனமாகச் செய்யும் அழைப்பு நல்லது. அன்னையே நமக்குள் இருந்து அழைப்பில் ஈடுபடுவது அதைவிடச் சிறந்-தது.**

**அன்னை உள்ளிருந்துகொண்டு நம் ஜீவனுக்கு அழைப்பைக் கற்றுக் கொடுத்தால், நம் அழைப்பில் பரிணாம வளர்ச்சி தெரியும்.**

# உலகம் – மோட்சம் – ஸ்ரீ அரவிந்தம்

கர்மயோகி

அன்னையை 15 ஆண்டுகளாக வழிபடும் அன்பரை அவர் ஆன்மீக அனுபவத்தைப் பற்றிக் கேட்ட பொழுது அகமும் புறமும் அர்த்தபுஷ்டியாக நிறைவு பெற்றுள்ளது என்றதுடன் இங்கு அன்னையிடம் பெறுவது எங்கும் பெற இயலாது என்றார். அன்னையைப் பற்றி அறிந்தவர் வாழ்வின் பிரச்சினைகள் பிரார்த்தனையின்றிக் கரைகிறது. புதுவாழ்வு பிறக்கிறது. பிரார்த்தனையெனச் செய்தால் பலிக்கத் தவறுவதில்லை. 10 பிரார்த்தனைகளில் 9 தவறாது பலிக்கிறது. பலிக்காத பிரார்த்தனையின் பின்னால் குணமிருக்கும். மனமாற்றத்தால் அது வழிவிடும். *The Life Divine* படித்துப் புரிந்து கொண்டால் மனம் மாற்றமடைந்தது போன்ற பலனிருக்கும். இது கடினமான நூல் எனப் பெயர் பெற்றது. அதற்குள்ள காரணங்களில் முக்கியமானது ஒன்றுண்டு. பகவானுடைய எல்லாக் கருத்துகளும் புதியவை. அவற்றைப் பழைய சொற்களால் எழுதும் பொழுது படிப்பவருக்குப் பழைய கருத்து மனதில் எழும். அது தடம் மாறும். அனாதை ஆசிரமத்தில் வேலை செய்பவர் ஆசிரமம் என்ற சொல்லை அனாதைகளுக்குரிய இடம்எனப் புரிந்து கொள்வது போலிருக்கும். மாயை, பிரம்மம், ஜீவாத்மா என்ற முக்கியச் சொற்களே அப்படி மாறுபடுகின்றன. இதுவரை இல்லாத கருத்துகளைப் பகவான் கூறுவதால் அவை தெளிவாக இருந்தாலும் மனத்தில் நிற்பதில்லை. பகுதி முழுமையைவிடப் பெரியது என்பது புரிந்து கொள்ள முடியாததில்லை. ஆனால் வழக்கிலில்லாததால் மனத்தில் கருத்து நிலை பெறுவதில்லை. *The Life Divine*க்கு அறிமுகமாக அதன் எல்லா முக்கியக் கருத்துகளையும், இக்குறையெழாதவாறு நூலின் சுருக்கத்தை எழுதுவது இக்கட்டுரையின் நோக்கம். பகுதி, முழுமை என்பவை எளிமையானவை. முழுமையுடைய பகுதி, முழுமையை விடப் பெரியதான பகுதி என்பவை இதுவரை உலகிலில்லாத எண்ணச் சிறப்புகள். இச்சொற்களும், இது போன்று 30



வண்ணமுடையவையும் நூலில் எங்கும் எழுவதால், நூல் புரியவில்லை என்று பலரும் கூறும் நிலை ஏற்பட்டுள்ளது. சாதாரணக் கம்மலில் ஒரு கல் வைரமானால், அக்கல்லின் விலை கம்மலின் விலையை விட அதிகமாகும். கல்லூரி ஸ்தாபகர் மகன் வகுப்பில் மாணவனானால், அவன் வெறும் மாணவன் மட்டுமல்லன், வகுப்பை விட முக்கியமானவன். எதிர்காலத்தில் கல்லூரிக்கு முதல்வராக வருபவன். பகவான் கூறும் கருத்தில் ஒரு பகுதியை இந்த உதாரணங்கள் விளக்கும். ஒரு மெஷின் முழுமை. அதனுள் உள்ள ஒரு பாகம் பகுதி. இந்தப் பகுதி எப்படி முழுமையாகும், முழுமையைவிடப் பெரியதாகும்? உடலில் கண், காது, மூக்கு, மூளைஎனப் பலப் பகுதிகள் உண்டு. பல இலட்சம் செல்கள் உள்ளன. ஆத்மா நம்முள் புதைந்து விழிப்பற்றுள்ளது. நம் எல்லாப் பகுதிகளிலும், எல்லாச் செல்களிலும் ஆத்மா புதைந்துள்ளது. ஆத்மா கண்ணில் விழித்தால் ஞானதிருஷ்டி ஏற்படும். நெஞ்சில் ஆத்மா விழித்தால் அசரீரி கேட்கும், வேணுகானம் கேட்கும். எந்தப் பகுதியில் ஆத்மா விழித்தாலும், அப்பகுதி நம் முழுவுடலுக்குச் சமமாகும், அதைவிடப் பெரியதாகவுமாகும். ஒரு செல்லில் ஆத்மா விழித்தாலும் அப்படியே. அதுவே பகவான் பகுதி; முழுமையைவிடப் பெரியது என்பது. இதுவும் முழுவதும் விளக்கும் உதாரணமில்லை. இதுவரை உலகம் அனுபவிக்காததைப் பகவான் கூறுவதால் உதாரணம் எழுத முடியவில்லை. இது போன்றவை கீழ்க்கண்டவை. அவை வருமிடங்களில் “புரியவில்லை” என்ற நிலை ஏற்படுகிறது. அவை,

மௌனமான சப்தம்

பகுதியான முழுமை

அரூபமான ரூபம்

அநேகனான ஏகன்

நிலையான சலனம்

அகண்டமான கண்டம்

புறமான அகம்

ஜடமான ஆன்மா

ஆனந்தமான வலி

அமிர்தமான விஷம்

பரமாத்மாவான ஜீவாத்மா
வலுவான பலஹீனம்
கோரமான அழகு
சந்தோஷமான வருத்தம்
ஞானமான அஞ்ஞானம்
மனிதனான பிரபஞ்சம்
பிரபஞ்சமான பிரம்மம்
காலத்தைக் கடந்த காலம்
மரணமான அமரவாழ்வு
புருஷனான பிரகிருதி.

ஸ்ரீ அரவிந்தம் மோட்சத்தைக் கடந்த நிலை; மோட்சத்தைத் துறந்த நிலை. மோட்சம் உலகைத் துறந்தது எனில் மோட்சம் உலகை விலக்குகிறது; எதிரியாகக் கருதுகிறது. ஸ்ரீ அரவிந்தம் என்பதைத் திருவுருமாற்றம் என்றும் கூறலாம். மோட்சத்தை ஏற்றால் திருவுருமாற்றமில்லை. உலகைத் துறந்து பெறும் மோட்சத்தைத் துறந்து பெறுவது திருவுருமாற்றம். இங்கு துறப்பது, கடப்பது, விலக்குவதில்லை. திருவுருமாற்றம்எனில் ஆத்மா நம் பகுதிகளுள் விழிப்பது. உடல் உதாரணமாக தெய்வீக உடலாக, ஆன்மீக உடலாகச் செயல்படுவது திருவுருமாற்றம். நாம் இல்லறம், துறவறம்என இரண்டை அறிவோம். ஸ்ரீ அரவிந்தம் அவற்றைக் கடந்த நிலையில் உயர்ந்த இல்லறம் உண்டு என்கிறது. அந்த இல்லறம் துறவறத்தை உட்கொண்டது என்கிறது. தூய்மையான துறவற நெறிப்படி நடத்தும் இல்லறம் அது. அது இல்லறமாகவும், துறவறமாகவும் உள்ள உயர்ந்த தெய்வீக வாழ்வு. இக் கண்ணோட்டம் ஸ்ரீ அரவிந்தத்திற்கு ஆன்மீக அடிப்படை. இவ்வடிப்படையில் மேற்சொன்ன 20 கருத்துகளையும் விளக்கினால் அது போதுமான அளவு எல்லாக் கருத்துகளையும் ஸ்ரீ அரவிந்த கண்ணோட்டத்திற்குள் கொண்டு வந்து விடும். ஒரு பெருந் தடை இவ்விதம் நீக்கப்படும். ஆன்மீகத்திற்கேயுரிய Self, Soul, being பிரம்மம், ஆத்மா, ஜீவன் என்ற கருத்துகள் ஆன்மீக இலக்கியத்துடன் பரிச்சியமற்றவருக்கிருக்காது. அவை மூன்றும் ஒன்றாகத் தெரிவதால் பிரித்துக் கூறுமிடத்தில் குழப்பம் ஏற்படும்.



விவரம் தெரியாத மக்கள் பிரதம மந்திரிக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள வித்தியாசத்தைப் புறக்கணித்து நாட்டின் தலைவர் என்றெடுத்துக் கொள்வார்கள். நாட்டின் அரசியல் அதிகாரத்தை எடுத்துரைக்கும் பொழுது அது குழப்பத்தை விளைவிக்கும்.

- Soul என்பது சிருஷ்டியுள் ஜீவனில் உள்ள ஆத்மா.
- Self என்பது சிருஷ்டியைக் கடந்த நிலையில் உள்ள ஆத்மா.
- Spirit என்ற சொல் Soul, Self என்ற இரண்டையும் உட்கொண்டது. மேலும் பிரகிருதிக்கும் உடையது.
- Being என்பது உருவம் உள்ள எந்த ஜீவனுக்கும் உள்ள உயிர்.

Spirit உருவம் பெறாத பிரம்மம். Soul, Self, உருவம் பெற்ற பிரம்மம். ஜீவன் (being) என்பது உருவம் பெற்றது, பெறாதது அனைத்திற்குள்ளும் புதைந்துள்ள உயிர்.

திருடனுடைய அடி திருவடி எனவும், விபசாரியின் கற்பு விலைமதிக்க முடியாதது என்பதும் உலகம் கேள்விப்படாத கருத்துகள். இவற்றைக் கேட்டு ஏற்பது ஒரு நிலை. அவற்றைப் புரிந்து கொண்டு ஏற்பது முடிவான நிலை.

திருடன் என்பவன் சமூகச் சட்டத்திற்கு எதிரி. கற்பு சமூக வாழ்வின் சிகரமான பண்பு. சமூகம் என்பது சிருஷ்டியில் ஒரு குறுகிய கருத்து. அதனால் ஓர் இலட்சிய அம்சமில்லை. சாதாரண மனிதனால் அதை ஏற்க முடியாது. அவனுக்குச் சமூகமே முடிவான இலட்சியம். சமூகத்தைக் கடந்துள்ள மனச்சாட்சியும் அவனுக்கு இரண்டாம்பட்சம். மனச்சாட்சி பெரும்பாலும் சமூக இலட்சியத்துடன் மோதுவதை அவனறிவான். இரண்டும் மோதினாலும், அவன் மனச்சாட்சியைவிட சமூகத்தை முக்கியமாகக் கருதுவான். சமூகம் முக்கியமானால் அவனைக் குடிமகன், (citizen, social individual) எனக் கூறுகிறோம். மனச்சாட்சிப்படி வாழ்பவன் உயர்ந்தவன். அவனைச் சான்றோன், ஆன்றோன் எனக் கூறுவோம். (He is a Psychological individual.) உலகைப் பொருத்தவரை இதுவே முடிவானது. ஸ்ரீ அரவிந்தம் அதைக் கடந்து ஆன்மீகப் பரிணாமத்தை இலட்சியமாகக் கொள்கிறது. அதன் பிரதிநிதி

பரிணாம மனிதன் (evolutionary individual). அது இன்று உலகம் அறியாதது. அவன் உருவாக வேண்டுமானால், சமூகச் சட்டங்களையும், மனச்சாட்சியையும் கடந்து மனிதனுடைய ஆத்மா வளரும் வண்ணம் மனிதனுடைய வாழ்வு அமைய வேண்டும். திருடன் உலகுக்கு எதிரியானாலும், சாக்கிய முனி கல்லெறிந்து கடவுளை வணங்கியது போல, திருடன் தன் ஆன்மா பரிணாம வளர்ச்சியடைய வேண்டி தன் செயலை ஆன்மீகச் சூழலுக்குப் பொருந்துமாறு அமைக்கும் பொழுது, உலகத்து மக்கள் உஷாரின்றி வாழ்வதைச் சிதைக்க வேண்டித் திருடுகிறான்.

- உஷாராக இல்லாமல் உள்ளே உலகம் வளராது. அனைவரையும் உஷாராக வாழ நிர்ப்பந்திப்பது திருடன் கடமை.
- ஆன்மீகப் பரிணாம வாழ்வின் குடிமகன் என்பதால் அவனடி திருவடி.

கற்புக்கரசி கணவனுடைய வாழ்வையும், உடல் வேகத்திற்குரிய தேவையையும் தன்னை மறந்து அழித்துப் பூர்த்தி செய்கிறாள். அதனால் அவள் கொழுநன் தொழுதெழுவாள். அவள் பெய்யெனப் பெய்யும் மழை. அவள் இலட்சியம் உன்னதமானது. ஓர் ஆண்மகனுக்குச் செய்யும் சேவை. விபச்சாரி அச்சேவையில் உடற்பகுதியை உலகுக்குச் செய்பவள். உடலால் சேவை செய்தாலும், உயிரால் உண்மைக்கு எதிராக இருந்தாலும், அனைவருக்கும் செய்வது என்பதால் அவள் சேவை பரந்தது. அவள் ‘கற்பு’ விலை மதிக்க முடியாதது என்பது பகவான் கூறுவது. இதுபோல் சமூகத்தையும், மனத்தையும் கடந்த இலட்சியங்களின் தத்துவம் அடங்கிய நூல் *The Life Divine* என்பதால் “புரியவில்லை” என்று அது பெயர் வாங்கியது.

காலம், காலத்தைக் கடந்த நிலைகளை நாம் அறிவோம். நம் வாழ்வு காலத்தால் கட்டுண்டது, காலத்திற்குக் கட்டுப்பட்டது. எதற்கும் காலம் தேவை. மரம் வளரவும், மனம் கனியவும், செயல் பலன் தரவும் உரிய காலம் தேவை. கல்லூரியில் சேர்ந்தவுடன் பட்டம் கிடைக்காது. 4 வருஷமாகும். விதை மரமாகிப் பலன் தரப் பல வருஷமாகும். இவை நாம் காலத்தால் ஆளப்படுவதைக் காட்டும்.



ரிஷி காலத்தைக் கடந்தவர். நாம் காலத்தில் வாழ்வதால், ஒரு காலத்தில் செய்த காரியம் இப்பொழுது நம்மைப் பாதிக்கும். அதைக் கர்மம் என்கிறோம். ரிஷி காலத்தில் வாழவில்லை என்பதால் அவருக்குக் கர்மமில்லை. காலத்தில் நாம் மனத்தால் வாழ்கிறோம். காலத்தைக் கடந்த நிலை ஆத்மாவுக்குரியது. ரிஷி ஆத்மாவில் வாழ்கிறார். ரிஷி ஆத்மாவில் உள்ள பொழுது விதையை நட்டால் அது உடனே மரமாகும். இதை நாம் மந்திரம், மாயம் என்கிறோம். ரிஷியின் சக்தி பெரியது. எதையும் உடனே சாதிக்க அவர் ஆத்ம சக்தி பயன்படும். அவரால் 10 வருஷத்திற்கு முன் இறந்தவரை உயிர்ப்பிக்க முடியும். ஆனால் வழக்கமாக அவர்கள் அப்படிச் செயல்படுவதில்லை. அவரும் மனத்தால் செயல்படும் பொழுது, கர்மத்திற்கும், காலத்திற்கும் ஓரளவு கட்டுப்பட்டவர். உலகமும், தத்துவமும், யோகமும் அறிந்தவை இவ்விரண்டு நிலைகள். பகவான் காலத்திற்கு மூன்றாம் நிலையுண்டு என்கிறார். இது ஆன்மீகத்திற்குப் புதிய சித்தி. மனிதன் வாழ்வது பூலோகம். தெய்வம் வாழ்வது மேல் உலகம், சொர்க்கம். தெய்வம் பூலோகத்தில் வந்து வாழ்ந்தால் பூலோகம், சுவர்க்கமாகும். மனிதன் தெய்வமாகி வாழ்வை நடத்துவது தெய்வீக வாழ்வு. அது பூலோகச் சுவர்க்கம். அதற்குரிய காலம் மூன்றாம் நிலையையுடையது. அங்கு காலமும், காலத்தைக் கடந்ததும் இணைந்து செயல்படும். பகவான் இதை Simultaneous integrality of Time-eternity and Timeless eternity என்கிறார். நாம் இதை மூன்றாம் நிலைக் காலம் எனலாம்.

- இவ்வுலகில் எச்செயலுக்கும் காலம் தேவையில்லை. நினைத்தவுடன் நடக்கும்.
- இவ்வுலகில் யுகம் க்ஷணமாகும்.

இன்று இது உலகில் செயல்படவில்லை என்பதால் உதாரணம் கூற முடியாது. இது போன்ற செயல்களைக் கூறலாம். நாம் ஒரு காரியம் செய்ய வேண்டுமானால் – அட்மிஷன், லைசன்ஸ் பெறுதல் – அதற்கு முறையுண்டு, காலம் தேவை. பிரின்ஸ்பால் அதை உடனே செய்ய முடியும். மந்திரி 3 மாத வேலையை 3 நாளில் முடிப்பார். இவ்வுலகில் 3 வினாடியும் தேவைப்படாமல் முடியும். மேலே குறிப்பிட்ட 20 கருத்துகளையும் இந்த மூன்றாம் நிலை காலத்திற்குரியவாறு புரிந்து கொண்டால் *The Life Divine* புரியும்.

நம் மனம் காலத்திலுள்ள பொழுது, விளக்கம் மூன்றாம் நிலையிலிருப்பதால், நூல் விளங்கவில்லை எனக் கூற வேண்டியுள்ளது. ஐன்ஸ்டீன் காலம் நிலையானதன்று, நிலை மாறினால் காலம் மாறும் என்ற பொழுது விஞ்ஞான உலகத்தின் மனத்தில் ஒரு புரட்சி எழுந்தது. அவர் 1913 இல் அதை எழுதினார். பகவான் இக் கருத்தை 1914 இல் ஆரம்பித்து 1920இல் எழுதி முடித்தார்.

தொடரும்....

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தொடர்ந்த ஆன்மீக முன்னேற்றம் பெற உதவுபவை:

- ✡ நம் பிரச்சினைகள் அனைத்தையும் அன்னைமூலமாக மட்டும் தீர்த்துக்கொள்வது.
- ✡ மறைந்துள்ள குறைகளை எடுத்து மலர்ந்த பூரணமாக்குதல்.
- ✡ நம் செயலின் திறத்தைத் தொடர்ந்து உயர்த்துதல்.
- ✡ ஞானத் தெளிவைத் தொடர்ந்து உயர்த்துதல்.
- ✡ செயலின் நிலையை ஒருபடி உயர்த்துவது, மனத்திலிருந்து ஆன்மாவுக்கும், உணர்விலிருந்து மனத்திற்கும் உயர்த்துவது.
- ✡ ஆத்மசமர்ப்பணத்தை உயர்த்துவது.
- ✡ புதிய குறைகளுக்கு மனத்தில் இடம் அளிப்பதில்லை.
- ✡ புறச்செயலை அகவுணர்வாக்குவது.

***அன்னையைக் கடந்த தீர்வு தேவையில்லை.***
***மறைந்துள்ள குறைகளின் மலர்ந்த பூரணம்.***
***தொடர்ந்து உயரும் திறன்.***
***வளரும் ஞானத் தெளிவு.***
***ஒரு நிலை உயரும் செயல்.***
***அர்ப்பணமாகும் சமர்ப்பணம்.***
***குறை நாடாத குணம்.***
***புறம் புனித அகமாவது.***



## இம்மாதச் செய்தி

**ரூபம் மனிதனுக்கு;**

**அரூபம் ஆண்டவனுக்கு;**

**அரூபத்தின் ரூபம் ஸ்ரீ அரவிந்தம்.**

**சமையல் சாப்பாட்டிற்கு;**

**அமிர்தம் அமர வாழ்விற்கு;**

**ஸ்ரீ அரவிந்தம் அமிர்தமான சமையல்.**

# லைப் டிவைன்

கர்மயோகி

## XV. The Supreme Truth-Consciousness

Page No.132
Para No.1

This Supermind is all.
It is all-containing.
It is all-originating.
It is all-consummating.
We have to regard this Supermind as the nature of the Divine Being.
The Divine Being has its absolute self-existence.
In its action it is the Lord.
It creates its own worlds.
We consider the latter aspect.
This has a truth.
We call it God.
This is not a too personal, limited Deity.
It is an ordinary occidental conception.
It is a magnified and supernatural Man.
It erects a too human a figure.
It is a relation between Supermind and ego.
The Supermind is creative.
The Deity has a personal aspect.



## 15. உயர்ந்த சத்தியஜீவியம்

சத்தியஜீவியமே அனைத்தும்.
அதனுள் அனைத்தும் உண்டு.
அனைத்தும் அங்கு உற்பத்தியாகிறது.
அனைத்தையும் முடிப்பது அதுவே.
இந்த சத்தியஜீவியத்தை நாம் தெய்வீக சத்புருஷனுடைய சுபாவமாகக் கருத வேண்டும்.
அப்புருஷனுக்கு பிரம்ம வாழ்வுண்டு.
அது செயல்படும்பொழுது ஈஸ்வரனாகும்.
அது தன் லோகங்களை உற்பத்தி செய்யவல்லது.
இந்த இரண்டாம் அம்சம் நமக்கு முக்கியம்.
இதற்கொரு உண்மையுண்டு.
நாம் அதைக் கடவுள் என்கிறோம்.
இஷ்ட தேவதை என்ற குறுகிய கருத்தன்று நாம் கூறுவது.
மேல்நாட்டார் அனைவரும் நினைப்பது அதுவாகும்.
மனிதன் இயற்கையை வெல்லும் திறன் பெறும் நிலை அது.
அது தெய்வத்தை மனித உருவத்தில் கற்பனை செய்வதாகும்.
அது சத்தியஜீவியத்திற்கும் அகந்தைக்கும் உள்ள தொடர்பு.
சத்தியஜீவியம் சிருஷ்டிக்கவல்லது.
இஷ்ட தேவதைக்குச் சொந்த அம்சம் உண்டு.

**We must not exclude this.**
**The existence has many faces.**
**The impersonal is only one of them.**
**The Divine is All-existence.**
**But it is also the one Existent.**
**(It is the sole Conscious-Being.**
**But still, it is a Being.)**
**We are not concerned with this aspect now.**
**The divine consciousness has an impersonal psychological truth.**
**It is the truth of the divine consciousness.**
**We are seeking to fathom this.**
**Let us fix it in a large and clarified conception.**

*Contd....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

சமூகத்திலும், வாழ்விலும் ஒவ்வொருவருக்கும் பிறருடைய சேவை, உதவி, ஆசீர்வாதம் தேவைப்படுகின்றன. சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் உள்ளவரிடமிருந்தும் அவை தேவைப் படுகின்றன. எந்த விஷயத்தில் எவரிடம் உதவி தேவையோ, அந்த விஷயத்தில் அவரை நம்பியுள்ளவராவோம்.

***பிறரை நம்பி இருப்பது தாழ்ந்த நிலையிலுள்ளவன் கீழ்ப்படிதலாகும்.***



**இதை நாம் விலக்க முடியாது.**
**பிரபஞ்ச வாழ்வுக்கு அநேக அம்சங்களுண்டு.**
**பொது அம்சம் அவற்றுள் ஒன்று.**
**தெய்வம் பிரபஞ்ச வாழ்வனைத்தையும் தழுவும்.**
**இருப்பினும் அது ஒரு ஜீவன்.**
**(அது ஒன்று மட்டுமே தன்னையறியும் ஜீவன்.**
**எப்படியானாலும் அது ஒரு ஜீவன், புருஷன்).**
**இந்த அம்சம் நமக்குத் தற்போது முக்கியமில்லை.**
**தெய்வீக ஜீவியத்திற்கு பொதுவான மனோதத்துவ உண்மையுண்டு.**

**அதுவே தெய்வீக ஜீவியத்தின் சத்தியம்.**
**அதை நாம் ஆழ்ந்து ஆராய்வோம்.**
**அதைப் பரந்த அளவில் தெளிவுபடுத்துவோம்.**

*தொடரும்....*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

மனிதன் ஆனந்தத்தை அவனுடைய ஜீவியத்தில் ஆழ்ந்து ஏற்றுக் கொண்ட நோக்கங்களால் வலியாக மாற்றுவதை நாம் காண்கிறோம்.

***ஆனந்தத்தை வலிந்து வலியாக மாற்றுவது மனிதவாழ்வு.***

### ஸ்ரீ அரவிந்த சுடர்

ஜடம் தெய்வ நிலைக்குப் போக துன்பத்தைக் கருவியாக நாடுகிறது.

***துன்பத்தின் பரிணாம நிலை.***

## பிரியம்

கர்மயோகி

- ✡ தன்னையறியாமல் மனம் அடுத்தவரை நாடுவது பிரியம் எனப்படும்.
- ✡ பிரியம் உணர்ச்சிக்குரியது; அன்பு ஆத்மாவுக்குரியது.
- ✡ பிரியம் பிரியமுள்ளவரை நாடும்.
- ✡ அன்பு அனைவரையும் நாடும். பிரியம் குறிப்பிட்டவரை நாடும்.
- ✡ அனைவரையும் நாடும் பிரியம் அன்பு.
- ✡ பிரியம் வரும், போகும் என்பது வழக்கு.
- ✡ வருவதும், போவதும் ஆசை, பாசம், பற்று; பிரியமில்லை.
- ✡ இருந்து போனது பிரியமில்லை.
- ✡ இல்லாமல் உற்பத்தியாகக் கூடியது பிரியம்.
- ✡ பிரியத்தில் உண்மை தவிர மற்றவை கலக்கக்கூடாது.
- ✡ நடிப்புக்காகப் பிரிந்திருக்கலாம் என்ற நண்பர்கள் உண்மையிலேயே பிரிந்தனர்.
- ✡ நடிப்பையும் ஏற்க முடியாதது பிரியம்.
- ✡ தம்பதிகள் பிரியமாக இருப்பார்கள்; இல்லாமலிருப்பார்கள்; ஒருவருக்கு மட்டும் பிரியமிருக்கும்.
- ✡ அவர்களும் நடிப்பாக 1 மணி நேரம் பழகினால், பேசினால், அது மறக்க முடியாததாகிவிடும்.
- ✡ நடிப்பால் பிரியம் எழாது என்பது உண்மை.
- ✡ அன்னைச் சூழலில் நடிப்புமூலம் நல்லது வருவதும் பெரியது.
- ✡ பிரியமேயில்லாத சிடுமூஞ்சி தம்பதிகள் 1 மணி நேரம் பிரியமாக நடித்தால், அதன்வழி அன்னை செயல்பட்டு அவரிடையே பிரியம் நிலையாக எழும்.



- ✡ அன்னைக்கு ஒத்து வாராத பொய், நடிப்பு, ஏமாற்றம், சூது, வாது, கபடு, திருடு நாம் விலக்க வேண்டியவை.

  மனத்தின் ஆழத்தில் இத்தனை தவற்றுக்குப் பின்னும் உண்மையிருந்தால் அன்னை அதன்மூலம் செயல்பட்டு வாழ்வை மாற்றிவிடுவார்.

  நமக்கில்லையென்றாலும் அன்னைக்கிருந்தாலும் அப்படி வாழ்வு மாறும்.
- ✡ அன்னை செய்பவற்றை மகாபாரதத்தில் காண முடியாது.
- ✡ உலகமே எதிரியானாலும் அன்னை பலிக்கும்.
- ✡ உடையவரே எதிரியானாலும் அன்னை பலிக்கும்.
- ✡ அன்னை தவறுவதேயில்லை; தவறியதேயில்லை.
- ✡ அன்னையிடம் வந்து, அன்னை பலிக்கவில்லை என்றவரில்லை. அன்னையை விலக்கியவருண்டு.
- ✡ அப்படிப்பட்டவரும் வாழ்வு ஜீவனற்றதாக இருந்தால் 1 மணி நேரம் பிரியமாக நடித்துப் பேசிப் பழகி, அன்னைக்கு ஒரு வாய்ப்பளிக்கலாம்.
- ✡ அன்னையை முழுவதும் அறிய முயல்வது ஒரு பெரிய யோகம்.
- ✡ அன்னைக்கு நிகராக எவரையும் கூற முடியாது. அவரே அவருக்கு நிகர்.
- ✡ *அவர் செயல் வழி வரும் அருள் பேரருளாகும்பொழுது, அது அன்னையையும் மிஞ்சும்.*

❀❀❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

முரண்பாடு, வரையறை, சோகம், நோய், பிரச்சினை, ஜடம், பிரிவினை, அறியாமை ஆகியவை அவற்றிற்கு நேர்மாறானவை. அகண்டத்தின் நோக்கோடு அவற்றைப் புரிந்துகொண்டால் அது தெரியும்.

*பிரம்ம ஞானத்திற்கு சோகம் ஆனந்தமாகத் தெரியும்.*

## நிலையான நிதர்சனம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

### முழுப்பூசணிக்காய்

✡ நெப்போலியன் உலகப் பிரசித்தி பெற்றவன். "என்னைப் போன்றவன் 4 அல்லது 5 நூற்றாண்டிற்கு ஒரு முறை வருவான்" என்றான்.

✡ இங்கிலாந்தில் ஏராளமான வீடுகளில் நெப்போலியன் சிலை இன்றும் உண்டு. இங்கிலாந்து நெப்போலியனுக்குப் பரமஎதிரி.

✡ ஐரோப்பிய நிலச்சுவான்தார்களை (aristocrats, ஜமீன்தார்கள்) அழித்தது பிரஞ்சுப்புரட்சி.

❀ இன்று ஐரோப்பா முழுவதும் பின்பற்றுவது நெப்போலியன் இயற்றிய சட்டம் Code Napoleon.

❀ 300 ஆண்டுகளில் ஒரு அரசன் சாதித்ததை நெப்போலியன் 3 ஆண்டுகளில் சாதித்தான் என்றார் ஒரு வரலாற்று ஆசிரியர்.

❀ உலகில் முக்கியமானவை இரு புரட்சிகள். ஒன்று பிரஞ்சுப்புரட்சி; அடுத்தது ரஷ்யப்புரட்சி.

❀ ஆங்கில வரலாற்று ஆசிரியர்கள் (factual precision) நிகழ்ச்சிகள், தேதிகள், வீரர்கள் எண்ணிக்கை இவற்றைக் கூறுவதில் உண்மையைத் தீவிரமாகக் கடைப்பிடிப்பவர்கள். அவர்கட்கு வெறுப்புண்டு. பிரான்ஸ் அவர்கட்கு ஒத்துவாராது. கம்யூனிஸம் அவர்கள் விலக்குவது. மனம் உண்மையைத் தீவிரமாக எல்லா இடங்களிலும் ஏற்றாலும், வெறுப்புள்ள இடத்தில் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்கத் தயங்கமாட்டார்கள்.



✰ ஒருவர் நெப்போலியனை பாக்டீரியா என்றார்.

✰ அடுத்தவர் 1917இல் நடந்த ரஷ்யப்புரட்சியைப் பற்றி எழுதிய நூலில் லெனின், ஸ்டாலின், கம்யூனிஸ்ட் என்ற சொற்கள் ஒரே ஒரு முறை வருகிறது. நாட்டில் ஒரு மாறுதல் ஏற்பட்டது என்றார். 'புரட்சி' என்ற சொல்லே நூலிலில்லை.

✰ டெய்வானை அமெரிக்கா 'சைனா' என பத்து ஆண்டுகள் கூறியது.

✰ சர்ச்சில் நேருவை சிறுபான்மையோரின் தலைவர் (leader of a tiny minority) என்றார்.

இவர்கள் அனைவரும் வாழ்வில் பெரும் வெற்றி பெற்றவர்கள். இப்படி அபாண்டமான பொய்யைப் பேசுபவர்கள் எப்படி வெற்றி பெறுகிறார்கள்? இது ஆண்டவனுக்கு நியாயமா? அன்னை கண்ணில் இவையெல்லாம் படவில்லையா?

✰ மனிதனிடம் நேர்மை, திறமையுண்டு.

அவனிடம் பொய்யுண்டு.

அவன் பெறும் வெற்றி அப்பொய்யை மீறிய மெய் பெறும் வெற்றி.

✰ நம் வாழ்வில் பொய்க்கும் மெய்க்கும் இடையே ஒரு எல்லை உண்டு.

நாம் அந்த எல்லையை அறிவோம்.

அவ்வெல்லைக்கோடு 1/2 அங்குலம் மெய்யை நோக்கி நகர்ந்தால் வாழ்வு பெரும்பலன் பெறும்.

எது பொய், எது மெய் என்பதைவிட, மெய்யை நோக்கி நகர்வது பலன் தரும் பணி.

✰ அதுவும் ஒரு விஷயத்தில் மெய்யை ஏற்று பூர்த்தி செய்ய முயன்றால், அம்முயற்சி பூர்த்தியாகும்பொழுது,

ஒரு பெரிய வேலை, இதுவரை பூர்த்தியாகாதது, பூர்த்தியாகும்.

சத்தியம் ஜெயிக்கும்.

சிறு காரியத்திலானாலும், பூரண சத்தியத்திற்குப் பூரண வெற்றி உண்டு.

*சத்தியப் பற்றுக்கோடு, ஆன்மீகச் சேவையாகும்.*

இம்முயற்சியை ஏற்பவருக்கு நிலையான தரிசனம் தேடி நிதர்சனமாக வந்து நிலைக்கும்.

## யோகத்திற்கும், யோகவாழ்விற்கும் என்ன வித்தியாசம்?

யோகம் ஆண்டவனையடைவது.

யோகவாழ்வு ஆண்டவனை வாழ்வில் காண்பது.

வாழ்வனைத்தும் யோகம் என்கிறார் பகவான்.

பகவானுடைய நோக்கில் யோகம் என்பது யோகவாழ்வே.

நாம் அதை பிரித்து யோகம் வேறு, யோகவாழ்வு வேறுஎனக் கொள்ளலாம்.

என் கருத்தைக் கூற தமிழிலோ, ஆங்கிலத்திலோ சொல் இல்லாததால் நான் அதை யோகவாழ்வு என்கிறேன்.

இது பகவான் கூறுவதில்லை; என் கருத்து.

என் கருத்து:-

யோகம் என்பது பெரிய இலட்சியம்.

மனிதர்களாகிய நாம் சாமானியர்கள்.

அனைவராலும் யோகத்தைப் பயில இயலாது.

யோக இலட்சியத்தை ஏற்பது பயில்வதாகாது.

மனதால் யோக இலட்சியத்தை ஏற்பதால் யோகத்தை ஆரம்பிக்கவும் முடியாது.

அதுவே நம் நிலை.

*இருந்தாலும் நாம் சாமானியரானாலும், மனம் உயர்ந்த இலட்சியத்தை விழைவதை நாம் அறிவோம்.*

அதனால் யோகத்திற்கு அடுத்தக்கட்டமாக, வாழ்வை யோக சக்தியால் நடத்துவதை நான் யோக வாழ்வு என்றேன்.

நம் வாழ்வை நம் திறமையால் நடத்துவது நம் அகந்தை வாழ்வு.



நம் வாழ்வை அன்னை மீதுள்ள நம்பிக்கையால் நடத்துவதை நான் யோகவாழ்வென்றேன்.

வேறு சொல்லால் எப்படி இக்கருத்தைக் கூறுவதுஎனத் தெரியவில்லை.

பகவான் கூறும் வாழ்வனைத்தும் யோகம் என்பது யோகத்தை ஏற்று வாழ்வில் வெளிப்படுத்துவது. நான் கூறுவது வாழ்வை ஏற்று, அங்கு யோகசக்தி வெளிப்பட முயல்வது.

மாநிலத்தில் முதல் மார்க் வாங்கிய பையனை சர்க்கார் வெளிநாடு அனுப்ப அழைப்பது பகவான் கூறுவது.

முதல் வகுப்பில் பாஸ் செய்தவன் சர்க்கார் ஸ்காலர்ஷிப் எழுதி பாஸ் செய்ய முயல்வது நான் கூறுவது.

| | | |
|---|---|---|
| ஒன்று மேலிருந்து கீழே வருவது | ----> | இது அனைவராலும் சிந்திக்கவும் முடியாது. |
| அடுத்தது கீழிருந்து மேலே போவது | ----> | இதை அனைவரும் பயில இயலலாம். |

## இதைப் பயிலுவது எப்படி?

மனத்தில் உண்மை (Sincerity) இருந்தால் அன்னை நம் முயற்சியை ஏற்பார்.

10 நாட்களாக அண்ணன் பேசாமல், பாராமுகமாக இருக்கிறார். இன்று என்னை எதிர்பார்க்கிறார். ஒரு புத்தகம் தேவை எனச் சொல்லி அனுப்புகிறார்.

பேசாத அண்ணனுக்குப் புத்தகம் கொடுத்தனுப்புவது உண்மை (sincerity) என நாம் நினைக்கிறோம். நமது நோக்கத்தில் (motive) உண்மை இருந்தால் அன்னை அதை ஏற்பார்.

புத்தகத்தைக் கொடுத்தனுப்பினால் 'ஏன், தம்பி கொண்டு வரக் கூடாதா?' என அண்ணன் நினைப்பார்.

நேராகப் போகக் கூச்சப்பட்டுக்கொண்டு, கொடுத்தனுப்புவதில் (Sincerity) உண்மையில்லை.

அந்த வித்தியாசத்தை அனைவரும் அறிவர்.

அங்கு நம் மனத்தில் உண்மையிருக்கிறதாஎன எவரும் அறிவர்.

அங்கு (Sincerity) உண்மையிருப்பது கஷ்டம்.

அங்கு உண்மையிருந்தால் அண்ணன் என்னை ஏற்பார். அதாவது அவருள் உள்ள அன்னை ஏற்பார்.

அவர் சொல்லியனுப்பினார்; கொடுத்தனுப்பினேன் என்பது அவர் நிலையில் நானிருப்பது.

அந்த உண்மை அன்னையையடையப் போதாது.

அவர் சொல்லியனுப்பினால், நாமே எடுத்துப்போவது அன்னைக்குரிய உண்மை.

அந்த உண்மை தவறாது.

அன்னைக்கு அந்தச் செய்தி எட்டும்.

அதன்மூலம் நம் குறிக்கோள் பூர்த்தியாகும்.

✡ இவையெல்லாம் பெரிய விஷயம்.

இவையெல்லாம் நமக்கில்லை என்பது பொதுவாக நினைப்பது.

பெரியதானாலும் நமக்குண்டு;

நமக்கில்லை என்பது என் நிலையில்லை; என்பதை நாமறிய முடியுமா?

அதற்குரிய சந்தர்ப்பம் உண்டா?

எதற்கும் வழியுண்டு; இதற்கும் வழியுண்டு;

மனமுண்டா என்பது மட்டும் கேள்வி.

'எனக்கு வழியுண்டு என்று தெரிந்தால், மனம் உண்டு என்பது என் நிலை' என்பவர்க்குப் பல சோதனைகளைச் சொல்லலாம்.

❀❀ எல்லாம் போய்விட்டது என்ற நேரம் வருவதுண்டு.

இனி நான் செய்யக்கூடியதில்லைஎனத் தோன்றும்.

ஆண்டவன் வந்தால் மட்டும் என்ன செய்ய முடியும் என்று மனம் கேட்கும்.

இந்தக் கொடுமைக்காரனுக்கும் மனம் மாறப்போகிறதா என்பது கேள்வி. (எலிசபெத் இது போன்ற எல்லைக்கு வந்தவள். ஆனால்



அவளுக்கு இக்கேள்விகள் எழவில்லை. டார்சிக்கு அக்கேள்விகள் எழுந்தன. அவற்றைப் புறக்கணித்து அவன் தான் செய்ய வேண்டியதைச் செய்தான். தானிருந்த கர்வமான மனநிலையில் இருந்து, அடக்கமான மனநிலைக்கு, எதிர்முனைக்குப் போனான். *வாழ்வு சிறப்பாகப் பலித்தது*).

மேற்சொன்ன நிலைகள் வாழ்விலுண்டு.

எக்காரணத்திற்காகவும் அவை நம் வாழ்வுக்குள் வர வேண்டாம்.

ஆனால் அதன் சிறு உருவம் (miniature) உண்டு.

உடல் சோர்கிறது.

மனம் சோர்வடைந்ததால் உடல் சோர்வதால், சோர்வு நமக்குக் கட்டுப்படாது.

இது சாப்பாட்டால் தீரும் களைப்பில்லை.

தூங்கி எழுந்தால் தீருவது இல்லை.

இது இனி இப்படியே இருக்கும்.

இதற்கு வழியில்லை.

இனி இதற்கு மேல் நமக்குத் தெம்பில்லைஎனத் தோன்றும் நேரம்,

மனத்தில் உண்மையை Sincerity ஆராய்ந்து,

சற்று உயர்த்துவது சோதனை.

அதற்குச் சோம்பேறித்தனம்.

பிறகு செய்யலாம்எனத் தோன்றும்.

பிறகு மறந்துவிடும்.

ஏன் இந்த சோதனை, இதுமட்டும் பலிக்குமாஎனத் தோன்றும்.

கேள்விகளையும், சோம்பேறித்தனத்தையும்

புறக்கணித்து சோதனை செய்வது

Sincerity - உண்மை.

அந்த உண்மை உடலில் தெம்பாக எழும்.

**மனத்தில் தெளிவாக உதயமாகும்.**

**முகம் பிரகாசிக்கும்.**

**உதட்டில் புன்னகை உதயமாகும்.**

**நமக்கும் பெரிய விஷயம் உண்டென வாழ்வுமூலம் அன்னை குரல் கேட்பது அது.**

*முற்றும்*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பண்புமூலமாக மனிதன் தெய்வமாகலாம் என்பதன் தத்துவம் மேற்சொன்னதில் பொதிந்துள்ளது. “பிரபஞ்சமே மனிதனைப் பண்பாகத் தொடுகிறது” என்கிறார் பகவான். உடலுக்கும் உயிருக்குமுள்ள பண்புகள் வாழ வழி செய்யும். மனத்திற்கும் ஆன்மாவுக்குமுள்ள பண்புகளால் தெய்வமாகலாம்.

***மனிதப் பண்பு தெய்வத்தை ஏற்கும் பாங்கு.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அகம் புறத்தைப் பிரதிபலிக்கும் நிலைகள் மூன்று: முழு சக்தியுடைய அகம் அதன் பிரதிபலிப்பாகப் புறத்தை ஏற்படுத்துகிறது. வலிமையில்லாத அகம் புற நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கும் பாங்குடையது. இவற்றிற்கிடையே இந்த இரண்டு அம்சங்களும் பல்வேறு நிலைகளில் அமைந்துள்ளன.

***அகத்தைப் பிரதிபலிக்கும் புற நிகழ்ச்சிகளின் மூன்று நிலைகள்.***



# உலகத்தின் தலைமை

என்.அசோகன்

பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து இரண்டாம் உலகப் போர் முடியும்வரை இலண்டன் மாநகரம் உலகத்தின் தலைநகரமாக விளங்கியது. உலகின் பல பாகங்களில் காலனிகளை நிறுவி, ஒரு பெரிய சாம்ராஜ்யத்தையே இங்கிலாந்து நடத்தி வந்ததால் அத்தகைய ஒரு தலைமை அந்நாட்டுக்குக் கிடைத்தது. அதை அரசியல் மற்றும் இராணுவத் தலைமை எனலாம். இங்கிலாந்து நாட்டின் பழைய சரித்திரத்தைப் பார்த்தால் அந்நாட்டை ரோமானியரும், ஜெர்மானியர்களும், பிரெஞ்சுக்காரர்களும்கூட ஆண்டுள்ளனர் என்று தெரிகிறது. நீண்ட காலம் அடிமை நாடாக இருந்தது, பிற்காலத்தில் ஆதிக்கம் செலுத்தும் நாடாக தலையெடுக்க உதவியுள்ளது. இன்று அமெரிக்கா இத்தகைய தலைமையை அனுபவிக்கிறது. அதற்குக் காரணம் அந்நாட்டுடைய பொருளாதார பலமாகும். அந்நாடு, புதிதாகக் குடியேறியவர்களால் உருவானது. புதிய இடத்தில், புதிய சாதனைகளைப் படைக்க முயன்ற போது அவர்களுடைய சக்தி ஏராளமாகத் தூண்டிவிடப்பட்டது.

நாகரீக வளர்ச்சி பெற்ற தாயகத்திலிருந்து அவர்கள் வந்திருந்தனர். எனவே, அதே நாகரீகத்தை மீண்டும் உருவாக்கும் திறன் அவர்களிடம் இயற்கையாகவே இருந்தது. மீண்டும் தாயகத்துக்குச் சமமான நாகரீகத்தை எட்டவேண்டும்என அவர்கள் எடுத்த முயற்சி தீவிரமாக இருந்ததால், தாயகமான ஐரோப்பாவை எட்டியதோடு நிற்காமல், தாயகத்தைத் தாண்டியும் சென்றனர். அதனால் உலகத்தின் தலைமை நாடாக இன்று அமெரிக்கா விளங்குகிறது. அரசியல், இராணுவம் மற்றும் பொருளாதார ஆதிக்கம் என்று எதுவாக இருந்தாலும் நிரந்தரமாக இருக்க முடியாது. அறிவின் ஆதிக்கம் இவற்றைவிடப் பெரியது. விஞ்ஞானம் வெறும் தொழில்நுட்பமாக இல்லாமல் அடிப்படை உண்மைகளைத் தேடும்போது அறிவின் வெளிப்பாடாக அமைகிறது.

இந்த விஞ்ஞான ஆதிக்கமும் நிரந்தரமில்லை. எதிர்கால உலகில் ஆதிக்கம் செலுத்தப்போவது ஆன்மாவாகும். வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கிய பழைய ஆன்மீகத்துக்கு இந்த தலைமை கிடைக்காது. வாழ்க்கையில் மலரக்கூடிய ஆன்மாவுக்கே இப்பெருமை உண்டு. பொருளாதார வளர்ச்சி என்பது ஒரு முழுமையான நோக்கமில்லை. இதுவொரு குறுகிய, பின்னமான நோக்கமாகும். இது போன்ற நோக்கங்களுக்கு விரும்பத்தகாத விளைவுகள் உண்டு.

ஒரு புறம் பொருளாதார வளர்ச்சி வந்தால், மறுபுறம் சுற்றுச்சூழல் கெடுகிறது. அறிவின் செயல்பாடு பின்னமானதாகும். அதனால் இப்படி நல்லது, கெட்டது இரண்டும் விழைகிறது. வாழ்வில் வெளிப்படும் ஆன்மா பின்னமானதில்லை; முழுமையானது. இப்படி ஆன்மாவை வாழ்வில் வெளிப்படுத்த முன்வரும் நாடுகளுக்கு இத்தலைமை வருங்காலத்தில் வந்து சேரும்.

பழங்காலத்தில் சன்னியாசமே ஆன்மீகமாகக் கருதப்பட்டது. இப்பொழுது நமக்கு வேண்டியது வாழ்வை விலக்கும் ஆன்மீகம் இல்லை. வாழ்வை ஏற்கும் ஆன்மீகமாகும். சன்னியாசத்துக்குப் பல சிறப்புகள் உண்டு. சன்னியாசியால் பலசாலியான எதிரியைக்கூட அடக்க முடியும். அடுத்தவருடைய எண்ணங்களைக்கூட அறிந்துகொள்ள முடியும். மந்திரத்தை உச்சரித்து இறந்துபோனவருக்கு புத்துயிர்கூடத் தர முடியும். ஒரு சன்னியாசியை மகிழ்வித்தால் அதன் விளைவாக உலகத்தின் எல்லாத் தேவைகளையும்கூட பூர்த்தி செய்ய முடியும். புதுப்புது வாய்ப்புகளை நம்மால் உற்பத்தி செய்துகொள்ள முடியுமென்றால், நம் வாழ்க்கையின் தரம் எவ்வளவு உயரும் என்று எண்ணிப்பாருங்கள். சம்பளத்துக்கு வேலை செய்வதற்குப்பதிலாகச் சுயதொழில் செய்வது, கம்ப்யூட்டரில் புதிய, இலவச சேவையை வழங்குவது, விஞ்ஞான ஆராய்ச்சியில் புதிய கருத்துகளைக் கண்டறிவது போன்றவை வாழ்வைப் புதினமாக்கும் முறைகளாகும். சன்னியாசி தன்னுடைய சக்தியை மோட்சத்துக்கு செல்ல பயன்படுத்துகிறான். அதே சக்தியை வாழ்வுக்குத் தலைமைதாங்க நாம் பயன்படுத்தலாம்.

❀❀❀



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**883) எதிர்பார்த்தல்: விஷயம் முடியும் என்பதை மனம் சுட்டிக் காட்டுவதை எதிர்பார்ப்பது குறிக்கும். உணர்வின் நம்பிக்கை எதிர்பார்க்கிறது. கடந்தகால அனுபவத்தால் ஒரு முறை அறிந்ததை ஆயிரம் முறை திரும்பச் செய்வது உடலின் பழக்கம். எதிர்பார்ப்பதும் அதற்கு இதுவே. இறந்து போனவரைத் தேடும் நிலையும் கண்ணுக்குண்டு. இரயிலில் அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தபிறகு அவரை வீட்டில் தேடுவதும் உடலுக்கு முடியும்.**

✡ ***எதிர்பார்ப்பது சக்திவாய்ந்தது.***

✡ ***தீவிரமாக எதிர்பார்ப்பது ஊருக்குப் போனவரை வீட்டில் தேடும்.***

‘எதிர்பார்த்தால் ஏமாந்து போவோம்’ என்பது ‘இச்சையற்றவர்க்கு சித்திக்கும்’ என்ற சொல் கூறுகிறது. எந்த உண்மைக்கும் எதிரான உண்மையுண்டு என்பது பகவான் வாக்கு.

**தீவிரமாக எதிர்பார்த்தால் காரியம் முடியும்**

என்பது அன்பர்கள் அனுபவம். அதனால் எதிர்பார்ப்பது என்பது யோக சட்டப்படி சரி என்றாகாது. சிறுவயதில் எதிர்பார்த்து ஏமாந்து போனவை, அதன்பின் மறந்து போனவை அன்னையிடம் வந்தபின் ஒவ்வொன்றாய் நம் முயற்சியின்றி பலிப்பதைக் காணாதவரில்லை. நம் ஆசைகள் பூர்த்தியாகாதவரை நாம் ஆண்டவனை நினைக்கமாட்டோம் என்பதனால் அன்னை அப்படிச் செய்கிறாரோஎன அன்பர்கள் கேட்பதுண்டு. காரணம் எதுவானாலும் அனுபவம் இதுவே. மனித இதயம் ஆசைமயமானது. ஆசை போகாமல் ஆண்டவன் நம் வாழ்வில் நுழையமாட்டார்.

✡ **அன்று எதிர்பார்த்தது இன்று மறந்துபோனாலும், அந்த ஆசை குறையாக**

**உள்ளவரை ஆண்டவனை நோக்கிப் போக முடியாது.**

✡ **'நான் நினைத்தேன்; நடந்தது' எனப் பலரும் கூறுவதுண்டு.**

**நினைவுக்கு சக்தியுண்டு.**

**சக்தி இன்றில்லாவிட்டால், ஒரு நாள் பலிக்கும்.**

**Mrs.பென்னட் தீவிரமாக தன் பெண்களுக்கு திருமணம் செய்ய ஆசைப்படு-கிறார்.**

**ஆசை பூர்த்தியாவதைத் தடுக்கும் என்பதுபோல் டார்சியும், பிங்லியும் ஊரைவிட்டே போய்விடுகின்றனர்.**

**ஆழ்ந்த ஆசை தன்னைப் பூர்த்தி செய்துகொள்ளும் என்ற சட்டப்படி அவர்கள் திரும்பிவந்து திருமணம் செய்துகொள்கிறார்கள்.**

**ஆசைக்குரிய சட்டங்கள் பல:**

1) **ஆசை காரியத்தைக் கெடுக்கும்.**
2) **ஆழ்ந்த ஆசை தன்னைத்தானே ஒரு நாள் பூர்த்தி செய்துகொள்ளும்.**
3) **அளவுகடந்து தீவிரமான அர்த்தமற்ற ஆசை எதிராகப் பலிக்கும்.**

**எதிர்பார்க்க அளவில்லை, அர்த்தமில்லை. எதையும் மனம் எதிர்பார்க்கும். முனிசிபல் எலக்ஷனில் ஓட்டுப்போடக் கேட்டவுடன், 'என்னை B.A. வரை படிக்கவைக்க வேண்டும்' எனப் பள்ளி மாணவன் கேட்டதை அறிந்து அதிர்ச்சியடைந்தவருண்டு; அவனுக்கு அதிர்ச்சியில்லை.**

✡ **யாராவது முயன்று என்னை முதன்மந்திரியாக்க வேண்டும் என்பது ஒருவர்.**

✡ **என் குடும்பத்தை அண்ணனோ, நண்பனோ, யாரோ ஒருவர் எடுத்து நடத்தமாட்டாராஎனக் குறைப்பட்டவர் ஒருவர்.**

✡ **பெரிய ஸ்தாபனத்தில் முக்கிய இடத்திலிருப்பவர் எந்தப் பணக்காரர் வந்தாலும் 'ஏன் இவர் எனக்குப் பெருந்தொகை தருவதில்லை' என அனைவரிடமும் குறை கூறுவார்.**

✡ **ஆசைப்படுபவர் M.L.A., M.P.யாக ஆசைப்படுவதில்லை. முதல்வராக வேண்டும் என்று மட்டும் நினைக்கிறார்.**

✡ **மனம் ஆசைக்குட்பட்டது; எதிர்பார்க்கும்; அர்த்தமேயின்றி எதிர்பார்க்கும். எழுதாத கடிதத்திற்குப் பதில் வரவில்லைஎன நினைக்கும். இரயிலில்**



**ஊருக்கு ஒருவரை அனுப்பிவிட்டு, வீட்டில் வந்து அவரைத் தேடும்.** ***ஆசை அனைத்தையும் ஆட்கொள்ளவல்லது.***

❀❀❀

**884) ஒரு கருத்து உன் எண்ணத்தில் பல முறை வரலாம். ஒரு அனுபவம் பல்வேறு அளவுகளில் மனதில் மீண்டும் மீண்டும் வரலாம். பழைய கருத்து புது வேகத்தோடு அடுத்த முறை மனதில் எழுந்தால் அது புதுக்கருத்தாகத் தோன்றும்.**

✡ ***பழைய அனுபவம் சற்று உயர்ந்து மீண்டும் வந்தால், அது புது அனுபவமாகத் தோன்றும்.***

✡ ***மயிரிழை மாறினால் பழைய அனுபவம் புதியதாக இருக்கும்.***

ஒரு நண்பனை 10 ஆண்டு கழித்துப் பார்த்தால், அவர் 10 ஆண்டுகட்குமுன் பேசிய அதே கருத்தை, அதே சொற்களில், அதே உற்சாகத்துடன் பேசுவதைக் காணலாம். '10 ஆண்டில் எந்த மாற்றமும் இல்லையே' என நினைக்கத் தோன்றும். வேறு சிலரை 6 மாதம் கழித்துப் பார்த்தால் மாற்றம் தெரியும்.

'ஒரு மனிதன் சொந்தக் காலில் நிற்க வேண்டும். அவனுக்கு அது மட்டுமே பயன்படும். உடன்பிறந்தவரோ, உற்றார், உறவினரோ, நண்பர்களோ உதவ முடியாது. உதவினால் அது அவருக்குப் பலன் தாராது. மேலும் கடன் தொகையாலும் முன் வர முடியாது. சொந்த முதலால்தான் முன்னேற முடியும். நாமே கண்டுபிடித்த கருத்தே நமக்குப் பலன் தரும்' என்பது ஒருவர் 19 வயதில் கண்ட அனுபவமாக இருக்கலாம். இதுவே அனைவருக்கும் உண்மையாகாது. அவரைப் பொருத்தவரையும் முழு உண்மையாகாது. ஏனெனில் உண்மை பலவகையது. அதன் மாறிய வண்ணங்கள் ஏராளம். அவை மாறிக்கொண்டேயும் இருக்கும். ஆனால் அந்த மனிதனுக்கு அந்த நேரம் அவர் பெற்ற அனுபவம் மேற்கண்டதைக் கூறியிருக்கும். அந்த உண்மையை மட்டும் இங்குக் கருதுவோம். மேற்சொன்னதில், (1) சொந்தக்கால், (2) அது மட்டும் பயன்படும், (3) உடன்பிறந்தவர், (4) உற்றார், (5) உறவினர், (6) உதவினாலும் பலன் தராது, (7) கடன் தொகை, (8) நாமே கண்ட கருத்துஎன எட்டு

பாகங்கள் உள. அவை 80ஆகப் பிரியலாம். உடன்பிறந்தவர் சிறியவர், பெரியவர், தமக்கை, தங்கை, தம்பி, அண்ணன்எனப் பிரியும். உதவி என்பது உடல் ஒத்தாசை, பண ஒத்தாசை, வாய்ச்சொல் எனவும், பெரியவை, சிறியவை எனவும், ஆபத்திற்குதவுவது, அர்த்தமற்ற உதவி எனவும், வலிய வந்த உதவி, கேட்டுப் பெற்ற உதவி, அடுத்தவர் கூறியதால் வந்தவை எனவும் அளவுகடந்து பிரிவுகள் வளரும்.

✡ **மயிரிழை அனுபவம் மாறினாலும், அது புது அனுபவமாகத் தோன்றும்.**

✡ **மேற்சொன்ன பொதுக்கருத்து, நிலைமை மாறும்பொழுது மனதில் வலுவாக மேலும் ஒரு முறை எழும். அநேகம் முறை அனுபவித்ததாகத் தோன்றாது. புதிய கருத்தாகத் தோன்றும்.**

✡ **ஒரு கருத்தில் பல பாகங்கள் உள. அவை முடிவற்றவை. உலகில் பல சந்தர்ப்பங்கள் உள. அவை அனந்தமாக வளரும். கருத்தின் ஒவ்வொரு பாகமும், ஒவ்வொரு சந்தர்ப்பத்தினுடன் இணையும்பொழுது எழுவது அனுபவம். அது புதுமையுடையது. புது மெருகுடன் எழும்.**

✡ **உணர்ச்சி, உணரும்; மனம் அறியும். ஒரு கருத்தை முழுமையாக அறிய அதன் ஒவ்வொரு பாகமும் ஒரு அனுபவம்மூலம் தெளிவுபடும். எனவே 84,000 ஜென்மம் வேண்டும் என்றனர்.**

✡ ***ஆத்மா அவற்றை ஒரு பார்வையில் முழுமையாக அறியும்.***

நண்பன் 10 ஆண்டிற்குப்பின் அதேபோல் பேசுவதன் காரணம் இதுவாகும். நாம் பேசியதை டேப்ரிக்கார்டில் எடுத்து வைத்து, சில நாள் கழித்துப் போட்டுப் பார்த்தால், நாம் நம் நண்பனைப் போன்றவர் எனத் தெரியும்.

**நம்மைச் சந்திப்பவர் நம்மைப் பிரதிபலிப்பவர்.**

*தொடரும்.....*

❀❀❀

### ஜீவிய மணி

**நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு**
**எல்லார்க்கும் பெய்யும் மழை.**





# அருளாகி, அமுதமாகி....

சியாமளா ராவ்

“அக்கா வந்துட்டாங்க.... கணேசா... அக்கா வந்துட்டாங்கடா... சீக்கிரமா வா....”

செல்வியைப் பார்த்தவுடன், சந்தோஷக் கூச்சலிட்டாள் பொன்னி. அவள் தம்பி கணேசனும் பறந்தோடி வந்தான். செல்வியின் கால்களைக் கட்டிக்கொண்டு கேட்டான், விழிகள் பளபளக்க....

“அக்கா.... இன்னிக்கு என்னக்கா?”

“இட்லியும், சட்னியும் கணேசா... ஆளுக்கு ரெண்டு எடுத்துகிட்டு, சண்டை போடாம சாப்டு, படிக்கணும்... சரியாப்பா”.

“சரிக்கா.....” மகிழ்ச்சியில் கண்கள் பளீரிட்டன. ஆனால் செல்வியின் கண்களிலோ துளிர்த்தது கண்ணீர்.

“கடவுளே... என்னாலயே பசி தாங்க முடியலையே... பாவம் இந்தக் குழந்தைங்க.... ஆமாம் பாவந்தான். இல்லேன்னாக்க இந்த வீட்டுல வந்து பொறந்திருக்குமா? எத்தனை பேரு, குழந்தைங்கயில்லேன்னு கோயில் கோயிலாச் சுத்தறாங்க. அங்கே ஏன் சாமிங்க கண்ணை மூடிகிட்டு, நம்ம பக்கம் மட்டும் கண்ண அகலமாத் தொறந்து, வரிசையாத் தராங்க. சாமிங்களோட கணக்கு என்னன்னு புரியலையே.... ம்க்கும்... பள்ளிக்கூடத்துல சொல்லித்தர கணக்கே மண்டையில ஏற எத்தினி நாளாவுது... இதுல சாமிக் கணக்கைப் பத்தி நமக்கென்ன.... மன்னிச்சுடு சாமி....”

“யப்பா... யப்பா.... குடுப்பா... எனக்குப் பசிக்குதுப்பா... குடுப்பா....”

பெரிய கத்தல் கணேசனிடமிருந்து எழவும், சட்டெனத் தன் புத்தகப் பையை கீழே போட்டுவிட்டு வாசலுக்கு வந்தாள்.

பொன்னிக்கும், கணேசனுக்கும் தந்த இட்லிகளைப் பருந்துபோல் தாவிப் பறித்து, வேக வேகமாக வாயில் அடைத்துக்கொண்டிருந்தான் தகப்பனான முருகேசு. அதுவும், முழுமையான குடிபோதையில் தள்ளாட்டம் இருந்தும் கைக்கும், வாய்க்கும் மட்டும் கொஞ்சம்கூட தடுமாற்றமில்லாமல். இவள் அருகில் போகும்போது, நாலு இட்லிகளையும் வாயில் அடைத்தபடி, எழுந்து போனான். பொன்னியின் கண்களில் நீரென்றால், கணேசனோ குரலெடுத்து அழவே ஆரம்பித்தான்.

பாவம் குழந்தைகள். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே. வழி ஒன்றும் தோன்றாமல், அழுதுகொண்டிருக்கும் தங்கை, தம்பியைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள். ஆனால் மனதிற்குள் ஓர் எண்ணம் மட்டும் ஓட்டமாக ஓடியது. இனிமேல் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்ற யோசனைதான் அது.

செல்வியின் குடும்பம் சிறியதுதான். செல்வியின் அம்மா ஆண்டாளு, அப்பா முருகேசு, செல்விதான் மூத்தவள், இரண்டாவது பொன்னி, கடைக்குட்டி கணேசன்.

ஆண்டாளு ரொம்பவுமே பொறுப்பானவள். வீட்டுவேலை செய்வாள். அங்குக் கிடைத்ததைக் கொண்டு, மேலே கொஞ்சமாகச் செலவு சாமான் வாங்கி, வீட்டிலிருப்பவர்களின் வயிற்றை நிரப்பிவிடுவாள். மாலை வேளைகளில் பூ கட்டித் தந்து, அதையும் செட்டுகட்டாக செலவழிப்பாள். என்ன ஆனாலும் சரி, குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டும் என்பதில் மட்டும் உறுதியாக இருந்தாள். தான் படிக்காமலிருந்தது எவ்வளவு பெரிய தவறு என்பதைக் காலம் தாழ்ந்து உணர்ந்ததால், தன் குழந்தைகளின் படிப்பை எக்காரணம்கொண்டும் நிறுத்தக்கூடாது என்பதில், மனதில் ஒரு வெறியுடனேயே செயல்பட்டாள்.

செல்வி இப்போது பத்தாவது படிக்கிறாள். கணக்கில் மட்டுமே அவளுக்குக் கொஞ்சம் தடுமாற்றம். ஆயினும் பாஸ் மார்க் வாங்கி விடுவாள். வகுப்பு டீச்சரும், அவளுக்கு உதவி செய்வதால், அவளால் பாஸ் மார்க் வாங்க முடிந்தது.



காலையில் பள்ளிக்குப் போகுமுன்பு, ஒரு வீட்டில் வேலை செய்து விட்டு, பள்ளியிலிருந்து திரும்பும்போதும், அவர்கள் வீட்டில் மாலை வேலையையும் முடித்து, கொடுக்கும் காபியோ, டீயோ, அதை மட்டும் குடித்துவிட்டு, டிபனை ஒரு கவரில் போட்டு, பொன்னிக்கும், கணேசனுக்கும் கொண்டுவந்துவிடுவாள்.

அதைத்தான் இன்று அவள் தகப்பன், பறித்துத் தின்றுவிட்டான். இனி என்ன செய்வது என மனதில் ஒரு தீர்மானம் உருவாகியது.

மறுநாள் காலை என்றும்போல் வேலை செய்ய, தன் புத்தகப் பையையும் எடுத்துக்கொண்டு கிளம்பினாள்.

“செல்வி, வந்துட்டியா... நேத்து ராத்திரி எம் பொண்ணு போன் பேசினாடி. அவளும், மாப்பிள்ளையும் குழந்தையோட ப்ளேன்ல வராளாம். மாப்பிள்ளைக்கு ஷார்ஜாவுல வேலை கிடைச்சுடுத்தாம். ஆனா, எம் பொண்ணும், பேத்தியும் போக ரெண்டு வருஷமாகுமாம். சாமான்கள் எல்லாம் அப்புறமா வரும். இதோ பாரு செல்வி, இனிமே கணக்கு வரலேன்னு நீ கஷ்டப்பட வேண்டாம். எம்பொண்ணு கணக்குல எக்ஸ்பர்ட். அவள சொல்லித்தரச் சொல்றேன். பாரு, பத்தாவதுல எத்தனை மார்க் வாங்கரேன்னு. புரிஞ்சுதா.....” உற்சாகத்தோடு பேசினாள் மாமி.

“அம்மா.... ரோம்ப தேங்ஸ்மா... ரொம்பரொம்ப சந்தோஷம்மா.... சரிம்மா, வேலையை முடிச்சுட்டு ஸ்கூலுக்குப் போரேம்மா”.

மனதின் உற்சாகம், வேலையில் சுறுசுறுப்பைக் கூட்டியது. சீக்கிரமாகவே வேலைகளை முடித்து, கொடுத்த காபி, டிபனை சாப்பிட்டு, பள்ளிக்குக் கிளம்பினாள்.

மனசு காற்றாய் பல இடங்களுக்குச் சென்று சுற்றியது. எல்லா இடங்களிலும் பூந்தோட்டங்களும், புல்வெளிகள் பச்சைப்பசேல் என்று காற்றில் ஆட, வண்ணத்துப்பூச்சிகள் படபடத்து பூக்களின் மீது அமர.....

சட்டெனக் கலைந்தாள். நிதர்சனம் அவள் முன் நின்றது. மனதை அடக்கினாள். பள்ளியின் வாசலை அடைந்து பிரேயரில் கலந்துகொள்ள வரிசையில் நின்றாள்.

“நீராடும் கடலுடுத்த....”

மாலை பள்ளி முடிந்து புறப்பட்டாள். மனதுள் ஏற்பட்ட ஆவலைக்

கட்டுப்படுத்தி வேகநடை போட்டாள்.

மாமி வீட்டில் நுழையும்போதே களிப்பும், சந்தோஷமுமாக ஒரே பேச்சும், ஒரு குழந்தையின் சிணுங்கலும்.

மெதுவாக உள்ளே நுழைந்தாள்.

வராண்டாவைத் தாண்டி, பெரிய கூடத்திலிருந்த ஓர் அறையின் முன் எல்லோரும் குழுமியிருந்தனர். வீடு முழுக்க ஒரு சுகந்தம். அவளுள்ளும் ஓர் ஆவல் ஏற்பட, சத்தமின்றி அந்த இடத்திற்குச் சென்றாள். ஆனால் அவர்கள் குழுமியிருந்ததில் ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. தயக்கத்துடன் மேலும் முன்னேறாமல் பின்னாலேயே நின்றாள் செல்வி.

எல்லோரும் அப்படியே அங்கேயே உட்கார்ந்தார்கள். மூன்று வயது குழந்தைகூட சம்மணமிட்டு கண்களை மூடி, இரு கரங்களையும் சேர்த்துக் குவித்தபடி உட்கார்ந்ததைப் பார்த்த செல்விக்குச் சொல்ல முடியாத வியப்பும், ஆச்சர்யமும். சட்டெனத் தலையை உயர்த்தினாள்.

ஒரு மூதாட்டியின் படமும், அருகிலேயே வயதானவரின் படமும்....

'ஓ! இவர்கள் வீட்டுப் பெரியவர்கள்போல. வந்திருக்கிற அக்காவோட மாமியார் வூட்டு மனுஷங்களாத்தானிருக்கணும். அவங்கதானே இந்தப் படங்களைக் கொணாந்து வச்சிருக்காங்க. பாவம்... அவங்க எத்தனை நல்லவங்களாயிருந்திருந்தா, இப்டி வந்தன்னிக்கே கும்பிடுவாங்க. சரி, நாமளும் கும்புடுவோம்...'

மனதின் ஓட்டத்தை நிறுத்தி, கண்களை மூடினாள்.

சரசரவென சத்தம்; குழந்தையின் சிரிப்புச் சத்தம்; சட்டென கலைந்தாள் செல்வி.

இதென்ன... இத்தனை நேரம் கண்மூடி அமர்ந்தது தான்தானா என்கிற வியப்பு ஏற்பட்டது செல்விக்கு. உடனே எழுந்தாள். பரபரவென வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள்.

அவள் சரீரம் முழுவதுமே உள்ளுக்குள் அதிர்வை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அந்த அதிர்வு அவளுக்கு வேண்டும் போலிருந்தது. ஆனால் தாளமுடியாது போலவும் இருந்தது. புரியாத புதிராயிருந்தது.

"செல்வி.... செல்வி..."

மாமிதான் அவளை அழைத்தது. செய்யும் வேலையை நிறுத்தி, அழைப்பிற்கு உடனே சென்றாள் செல்வி.



"மாலூ.... நான் சொல்லலே, இவதான் அந்த செல்வி. பத்தாவது படிக்கிறா. நறுவிசா வேலை செய்வா. காலையில வேலைய செஞ்சுட்டு, ஸ்கூலுக்குப் போவா. சாயந்திரமா மறுபடி வந்து வேலை செஞ்சுட்டு வீட்டுக்குப் போவா. நல்ல பொண்ணுடி. நன்னாவும் படிக்கிறா... நீதான் அவளுக்கு கணக்கு மட்டும் சொல்லித்தரணும். அதுல கொஞ்சம் வீக். மத்தபடி கெட்டிக்காரிடி மாலு....." மாமியின் வார்த்தைகளுக்கு நாணமுற்று, மாலு என்கிற மாலதியை வெட்கப்புன்னகையோடு பார்த்தாள் செல்வி.

"செல்வி! டோண்ட் வொர்ரி. ஒரு, ரெண்டு நாள் போகட்டும். கணக்குல உன்னைப் புலியா மாத்திடறேன், சரியா. பத்தாவது மட்டும் படிச்சா போதாது. மேல்கொண்டு படிக்கணும், சரியா....?"

"கண்டிப்பாக்கா. எனக்கும் நிறைய்ய படிக்கணும்னு ஆசைதாங்க்கா. ஆனா..... வசதி..." தலைகுனிந்தாள் செல்வி. கண்களின் ஓரத்தில் நீர் மணிகள் துளிர்த்தன.

"செல்வி.... வசதியப்பத்திக் கவலைப்படாதே. நீ நன்னாப் படிச்சீன்னா, எவ்வளவு வேணுமானாலும் நான் படிக்கவைக்கரேன். பணமில்லேன்னு படிப்பை மட்டும் நிறுத்தாதே... புரிஞ்சுதா...."

"அக்கா.... தேங்ஸ்க்கா.... தேங்ஸ்..." சொன்னவள் உடனே மாலதியின் கால்களில் வீழ்ந்து வணங்கவும், சட்டென அவளைத் தடுத்து நிறுத்திய மாலதி கூறினாள், "செல்வி, நீ வணங்கி, நமஸ்கரிக்க வேண்டியவங்க அதோ, நாமல்லாம் உட்கார்ந்து தியானம் செஞ்சோமே, அவங்களுக்குத் தான். புரிஞ்சுண்டியா....?"

"அக்கா.... அவங்க உங்க மாமியார் வூட்டுப் பெரியவங்களாக்கா. நான் தினமும் அவங்களை வணங்கறேங்க்கா...."

பெரியதாய் சிரித்தாள் மாலதி.

புரியவில்லை செல்விக்கு. நாமென்ன தப்பாகப் பேசிவிட்டோம்என. "செல்வி! இல்லேம்மா. அவங்க எனக்கு மட்டும் சொந்தமில்லே. எல்லாருக்கும்தான் சொந்தம். ஏன், இன்னிக்கு நீகூடதானே அவங்க முன்னாடி உக்காந்து தியானம் பண்ணே...."

"அக்கா... தியானமா... நானா.... புரியலேக்கா....."

"உனக்குப் புரியாமலேயே, தெரியாமலேயே, நீயும் எங்களோட உக்காந்துண்டு, கண்ணை மூடி செஞ்சதுதான் தியானம், செல்வி. உன்னை மறந்து, உன் நினைவுகளைத் துறந்து, நிச்சலனமா, அமைதியா

உன்னை உக்காரவச்சது யாருன்னு நினைக்கிறே? தெரியுமா?"

"தெரியலேக்கா. நீங்கள்ளாம் கண்ணை மூடி உக்காந்திருந்தீங்க. சரின்னு நானும் அப்படியே செஞ்சேன். ஆனாக்கா, நான் உக்காந்தது தான் தெரியும். அதுக்குப்பிற்பாடு என்னன்னு எனக்கு ஒண்ணுமே தெரியாதுக்கா. திடீர்னு சரசரன்னு ஏதோ சத்தம் கேட்டுத்தான் முழிப்பு வந்துது. அக்கா... வந்து... எனக்கு...."

"சொல்லு, செல்வி. ஏன் தயங்கரே? என்னம்மா, எதுவானாலும் சொல்லு. நான் ஒண்ணும் தப்பா நினைக்கமாட்டேன். சொல்லும்மா செல்வி... எனக்குக் கேட்கணும் போலிருக்கு. சொல்லு.... என்னாச்சு உனக்கு?"

"அக்கா.... என்னைத் தப்பா நினைக்கமாட்டீங்கதானே...."

"ம்.ஹூம்... எதுவுமே தப்பில்லே செல்வி. சொல்லு."

''அக்கா! உங்களையெல்லாம் பாத்துகிட்டு, நானும் அப்படியே உக்காந்தேங்க்கா. அவ்வளவுதான் தெரியும். ஆனா, எழுந்தபிற்பாடு.... எனக்குள்ள என்ன நடந்துச்சுன்னு தெரியலேக்கா. என் உடம்புல, தலையிலேயிருந்து கால் வரைக்கும் என்னமோ ஒரு மாத்தமா, சந்தோஷமா, சுறுசுறுப்பான்னு தெரியலேக்கா.... அந்த உணர்வு எனக்கும் வேணும்போல தோணுச்சு. ஆனா, அதை என்னால தாங்க முடியாததாவும் இருந்துச்சுக்கா. எனக்குச் சரியா சொல்லத் தெரியலே. ஆனா, இன்னும் எனக்குள்ளே..... எனக்குள்ளே...."

மேலே பேச முடியாமல் அழுதபடியே சிரித்தாள் செல்வி.

அவ்வளவுதான். செல்வியை வேலைக்காரி, தங்களைவிடத் தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவள் என்பதையும் மறந்து, தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டு மாலதி அவள் நெற்றியில் முத்தமிட்டாள்.

''செல்வி.... நீ எத்தனை பெரிய அதிர்ஷ்டக்காரி, எத்தனை பாக்கியசாலின்னு உனக்கேத் தெரியலே. உனக்கு, வாழ்க்கைங்கறது ரொம்ப உன்னதமாத்தான் இருக்கும். இது நான் சொல்லலே செல்வி. அவங்க ரெண்டு பேருந்தான் உனக்கு அப்பேர்ப்பட்ட அருளைத் தந்துருக்காங்க. ம்.... அவங்க ரெண்டு பேருந்தான் இனிமே உன் வாழ்க்கையைப் பார்த்துக்கறவங்க...."

குழம்பியே போனாள் செல்வி.

"அக்கா... சத்தியமா 'உட்டேன்'. எனக்கு நீங்க பேசறது ஒண்ணுமே



புரியலேக்கா. அவங்க ரெண்டு பேரும் யாருக்கா...."

''அவங்கதான் ஸ்ரீ அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும். செல்வி.... இன்னிக்கு அவங்க அறிமுகம் உனக்கு அற்புதமான உணர்வைத் தந்துருக்கு. விட்டுடாதே. அந்த உணர்வு உனக்கு எப்போதும் அவங்களை நினைக்கிறபோதும், பார்க்கிறபோதும் ஏற்படணும். எப்போ, ஒண்ணுமே, ஏன், எதுவுமே தெரியாத நிலையில, நீ அவங்களை முன்னிறுத்தி, மனசுல நினைச்சு உக்காந்தே பாரு. அந்த பக்தியும், சலனமற்ற உணர்வுமே உனக்கு ஒரு பெரிய பொக்கிஷத்தை வாரித் தந்துருக்காங்க. செல்வி, மறுபடியும் சொல்றேன். இந்த, எண்ணங்களற்ற தூயமனசோட எப்பவும் அவங்களை வணங்கு, நினை, விட்டுடாதே. எந்த ஒரு சஞ்சலமும், சந்தேகமும், மனக்கஷ்டமும் வந்தாலும், மனசுல அவங்களை நிறுத்தி, மானசீகமா வணங்கு. அதற்குண்டான பலன் உனக்கே தெரியும், செல்வி. சரி, ரொம்ப நேரமாச்சு. வீட்டுக்குக் கிளம்பு. நான் உனக்கு ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தரைப் பற்றிச் சொல்றேன்; கணக்கும் சொல்லித்தரேன், சரியா..... செல்வி, வந்த முதல் நாளே எனக்கும் சந்தோஷமாயிருக்கும்மா. எனக்கும் கொஞ்சம் வேலையிருக்கு. போய்ட்டு வா, செல்வி...."

மாலதி நிரம்பிய மனதுடன், உள்ளே சென்றாள்.

அன்னையை வணங்கி நன்றி கூறினாள்.

"அன்னையே! நான் வந்து இறங்கிய முதல் நாளே, என் மனதிற்கு உகந்த அற்புதமான நிகழ்வு. அம்மா! என்றுமே உங்கள் பார்வையிலிருந்து விலகாமல் இருக்க அருள்புரியுங்கள் அம்மா....'' மனமுருக வேண்டினாள்.

வீட்டினுள் நுழையும்போதே பசியோடு காத்திருக்கும் பொன்னி, கணேசன் எதிர்பட்டார்கள்.

"அக்கா....'' கணேசன் ஓடிவந்து ஆவலோடு அவளைக் கட்டிக் கொண்டான்.

தெருவைத் திரும்பிப் பார்த்தவளுக்கு திக்கென்றாகியது. தள்ளாட்ட நடையுடன் வந்துகொண்டிருந்தான் முருகேசு.

சட்டென கணேசனையும், பொன்னியையும் அழைத்துக்கொண்டு

போய் வீட்டின் பின்பக்கமிருந்த மணல்திட்டில் உட்காரவைத்து, கொண்டு வந்த திண்பண்டத்தைக் கொடுத்தாள். கதவை சாத்தியபடி உள்ளே வந்தாள்.

முருகேசு வாசலில் நின்று சுற்றுமுற்றும் பார்ப்பதை உணர்ந்து, தன் புத்தகப்பையை வைத்துக்கொண்டு திண்ணையில் அமர்ந்தாள்.

“செலுவி.... செலுவி.....” முருகேசு கூப்பிட்டபடியே அவளருகில் வந்து ஆட்டத்தோடு நின்றான்.

ஏறெடுத்துப் பார்த்தாள் செல்வி. முன்புபோல் அவளிடம் இப்போது பயமில்லை.

“என்னம்மா கொணாந்துருக்கே... குடு கண்ணு, பசிக்குது. வவுறு கபகபன்னுதும்மா. ஏதாவது சாப்பிடக் குடும்மா....'' தட்டுத்தடுமாறி போதையில் பேசினான்.

கோபத்திற்குப்பதிலாக தகப்பன் மேல் இரக்கமே ஏற்பட்டது. ஏன்எனத் தெரியவில்லை. ஆனால், அவனைப் பார்த்ததும், அந்த தள்ளாட்டம், நாற்றம், கெஞ்சல் எல்லாமே வெறுப்பை ஏற்படுத்தினாலும், மற்றவர்களின் தந்தையைப்போல் இவனையும் எப்படியாவது திருத்தி, ‘இவர்தான் என் அப்பா’ என்று பெருமையாகக் கூறிக்கொள்ளும் அளவிற்கு நிலைமையை மாற்ற வேண்டுமென்ற உறுதி பிறந்தது.

இதென்ன இன்று அப்பாவைப் பற்றி இத்தனை நாள் தோன்றாதது எல்லாம் தோன்றுகிறது என்றும் மனம் நினைக்காமலில்லை. அதை ஏன் இன்று நினைத்தோம் என்ற ஆராய்ச்சியையும் செய்யவில்லை.

உள்ளே சென்று தட்டில் சோறும், சாம்பாரும் ஊற்றி எடுத்து வந்தாள். ஒரு லோட்டாவில் நீரும் கொணர்ந்து தந்தையின் முன் வைத்தாள். பாதி கீழேயும், பாதி வாயிலுமாக அவன் தின்பதைக் காணச் சகிக்காமல் சத்தமின்றிக் கதறினாள் செல்வி.

⋙⋙

ஆண்டாளு பூ கட்டி முடித்து, விரல்களைச் சொடுக்கிக்கொண்டாள். வீட்டுவேலைகளில் ஈடுபட்டிருந்தபோதுதான் செல்வி வந்தாள்.

“கண்ணு, பாடமெல்லாம் படிச்சியா... இப்ப கணக்குப் புரியுதா செல்வி.... நல்லா படிக்கணும்மா. நீயும், பொன்னிக்கும், கணேசுக்கும் சொல்லித் தாம்மா. இத பாரு துட்டு சேர்த்து, சொத்தா வச்சிருந்தாக்கூட அளிஞ்சு



போயிடும் கண்ணு. படிப்பை மட்டும் யாராலயும் உங்கிட்டயிருந்து பிடுங்கிக்கவோ, கொள்ளையடிக்கவோ முடியாதும்மா. நல்லா படிடா.... எந்த கஷ்டத்தையும் மனசுல ஏத்திக்காதே கண்ணம்மா, புரிஞ்சுதா.....”

“அம்மா... எனக்கு எந்தக் கொறையும் இல்லேம்மா. நான் படிப்பை நிறுத்தவேமாட்டேம்மா. அப்பாவை அவர் வழியில விட்டுடும்மா. எனக்கும், பொன்னி, கணேசுக்கும் படிப்பைப்பத்தி, அதோட முக்கியத்தைப்பத்தி இவ்வளவு சொல்ற நீ படிக்காதவதான். ஆனாலும் ரொம்ப புத்திசாலிம்மா. அதனாலதான் எங்களுக்கும் படிப்பு மேலே ஆசையிருக்குதோ இல்லையோ, படி, படின்னு நல்லவிதமா எங்களுக்குச் சொல்றே. நிச்சியமா உங்குளந்தைங்க படிப்போம்மா, சரியா....”

அப்படியே அம்மாவின் மடியில் சாய்ந்து, சிரித்தாள் செல்வி.

⋙⋙

“செல்வி, நாளைக்கு ஞாயித்துக்கிழமை. ஒண்ணாந்தேதி வேறே. சீக்கிரமா வரியா.... பூவெல்லாம் அடுக்கணும். மதர் ஸிம்பலும், ஸ்ரீ அரவிந்தர் ஸிம்பலும் போடணும், வரியா...”

“வரேங்க்கா..... ஆனா, ஸிம்பல்றீங்க, அடுக்கணும்கறீங்க... ஒண்ணுமே புரியலேக்கா. என்ன செய்யப் போறீங்க. பூவைக் கட்டுவாங்க, அடுக்குவாங்களா.... புரியலையே.... தினமும் தட்டுல அடுக்கித் தண்ணீ ஊத்தி வைக்கறீங்க.... அது போலவாக்கா....”

“ஆமாம் செல்வி.... நாளைக்கு அஞ்சு மணிக்குக் காலையிலேயே வந்துடு. பாரு, அப்ப அன்னையைபத்தியும் எனக்குத் தெரிஞ்சவரை சொல்றேன். புத்தகங்கள் இருக்கு. அதையெல்லாம் படி. புரியாததை நாம கேட்டுத் தெரிஞ்சுக்கலாம். சரி, நாளைக்கு வந்துடு.... சரியா....”

விடிந்து, விடியாத முன்பே, சீக்கிரமாகக் குளித்துவிட்டு சுத்தமான உடையை அணிந்து வந்தாள்.

“அம்மா.... வீடே பளிச்சுனு இருக்கும்மா. பார்க்கவே சந்தோஷமா.... மனசு பொங்குதும்மா...” சொல்லும்போதே அவள் முகம் விகசித்தது.

“ஆமாம் செல்வி, அன்னைக்கு சுத்தம் ரொம்ப முக்கியமானது. துப்புறவா இருக்கணும். ஏன், சுத்தம் சோறும் போடும்னு நீயும் படிச்சிருக்கேதானே....”

“ஓ..... அதுதான் நேத்திக்கு, முந்தாநாளுன்னு, ஒரு வாரமா வீட்டை–

யெல்லாம் சுத்தப்படுத்தினோமா.... ஆமாங்க்கா, வீடு எவ்வளவு பளிச்சுனு அளகாயிருக்குதானே..... சரிக்கா... இப்ப என்னக்கா பண்ணணும்?"

"இரு, அப்பா கோயம்பேடுலேருந்து பூ வாங்கிண்டு வருவார். வந்ததும் நாம, சைஸ்வாரியா பிரிச்சு, தண்ணியில அலசி, வைக்கணும். சில பூக்களை, துலுக்கசாமந்தியெல்லாம் தண்ணிபட்டா கறுத்துடும். சரியா செய்யணும். இரு.... இன்னிக்கு நீ பார்த்தியான்னா புரிஞ்சுப்பே....."

"அக்கா... அம்மாவும் சொன்னாங்க, நீங்களும் சொல்றீங்க. உங்க வீடு பெரிய பங்களா டைப்பு. ஆனா.... எங்க வீடு ரொம்ப சின்னது. அதுல, முடிஞ்சவரை சுத்தமாத்தான் வச்சிருக்கோம். ஆனாலும் உங்க வீடுபோல, எங்களால சுத்தமா வச்சுக்க முடியலையே...."

"வீடு பெரிசு, சிறிசுன்னு நீ சொல்றே பாரு, அது உண்மைன்னே வச்சுக்குவோம். எல்லாருமே பங்களாவாசியாயிருக்க முடியுமா? இல்லா எல்லாருமே குடிசைவாசியா ஆகிட முடியுமா? சொல்லு செல்வி...."

"அதெப்படிக்கா? நீங்க பணக்காரங்க. நாங்க ஏழைதானே! போட்டியா போட முடியும்?" ஆதங்கத்தோடு செல்வி பேச, மாலதி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டாள்.

"செல்வி, எதையும் நம்மால முடியுமான்னு சந்தேகப்படறோம் பாரு, அது ரொம்ப தப்பும்மா. அன்னையோட கோட்பாடுகள் எல்லாமே நம்மால செய்யக்கூடியதுதான் செல்வி. ஆனா, நடைமுறையில ஒன்றுபோல செய்யிறது கடினம்னு கண்டிப்பா உணர முடியும். ஆனா, அதை, அந்த கடினத்தை, நாம மனசால சுலபமா ஏத்துண்டு, ஒன்றுபோல செய்யிறதுக்கு திடமான மனசுதான் வேணும் செல்வி. தவறுகள் வரலாம். ஆனா, அந்தத் தவற்றை உணர்ந்து நாம திருந்திட்டோம்னு வை, அன்னையோட அருள் நமக்கு மழையா கொட்டும். அதை உன்னால உணரமுடியும் செல்வி".

"நிஜமாவாக்கா.....? அப்படீன்னா.... நானும் எங்க வீட்டை சுத்தமா வச்சுக்கரேங்க்கா....." கண்கள் மின்னிட ஆவலோடு கூறும் அவளையே பார்த்தாள்.

"ரொம்ப சந்தோஷம் செல்வி. அட! நீ சொன்னவுடனேயே பூ வந்துடுத்து பாரு. வா, மொதல்ல ஆஞ்சு அடுக்கலாம், வா...."

பூக்களின் மணமும், வண்ணமும் அவளை விகசிக்க வைத்தது. அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படங்கள் உயிரோடு நம்மையே கருணையோடு



பார்ப்பது போலிருந்ததைக் கவனித்து, ஆச்சரியப்பட்டுப்போனாள் செல்வி. அவளையும் அறியாமல் இரு கரங்களும் குவிந்து, கண் இமைகள் மூடின.

மூடிய கண்களுக்குள் கண்ணைக் கூசும் வெளிச்சம் பிரவாகமாய் கொட்டுவது போலிருந்தது. அந்த வெளிச்சத்தை அவளால் கண் திறந்து பார்க்கவும் முடியவில்லை. கண் திறந்தால் அந்த ஒளி வெள்ளம் தன்னை விட்டு விலகிவிடுமோ என்கிற எண்ணத்தில் திறக்காமலிருந்தாள்.

படிப்படியாய் அந்த வெளிச்சம் குறைந்துகொண்டே வந்தது. கண்களைத் திறந்தாள்; எதிரில் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் பிரகாசமாகத் தெரிந்தார்கள். கண்களைக் கசக்கிவிட்டு மீண்டும் பார்த்தாள். அப்போது பிரகாசமான அன்னையின் முகத்தில் புன்னகை மலர்ந்தது. அவளுடைய சின்னஞ்சிறு இதயம் துள்ளித் துள்ளிக் குதித்தது. பரவசம் அவளைப் பூராவும் அணைத்துக்கொண்டது. தாங்க முடியவில்லை. மயங்கி, அங்கேயே சரிந்தாள் செல்வி.

"மாலூ... மாலூ, இங்கே வாயேன். இந்தப் பொண்ணப் பாருடி. மயங்கி விழுந்துருக்கு. சீக்கிரம் வாயேன்".

தண்ணீரைத் தெளித்தாள் மாலதி.

"அம்மா! அவளுக்கு காபி ஏதாவது கொடுத்தியாம்மா?"

"இல்லையேடி..... நீ கொடுத்திருப்பேன்னில்லையா நான் நினைச்சேன்?"

"பாவம்மா. அன்னையைப்பத்திதான் பேசிண்டிருந்தா. பூவும் வந்தது. சரி, பகுத்து தனித்தனியா வைப்போம்னு தட்டெடுக்கப் போனேன்...."

அதற்குள் எழுந்த செல்வி, "அக்கா! என்னக்கா எம்மூஞ்சில்லாம் தண்ணியாயிருக்கு. என்னாச்சுக்கா? புரியலையே.... ஆனா... அக்கா... நிஜம்மா... ஆமாங்க்கா, சத்தியமா எனக்கு ஒரே சந்தோஷமாயிருக்-குக்கா... ஒடம்பெல்லாம் சிலிர்க்குதுக்கா.... சொல்லத் தெரியலே.... ஆனா.... ரொம்ப சந்தோஷமாயிருக்கு.... அதுக்கு மேலே எதையுமே பேசத் தெரியலேக்கா....

சொன்ன செல்வி, மாலதியின் கரங்களைப் பிடித்தபடி அன்னை, ஸ்ரீ அரவிந்தர் படங்களை வைத்திருந்த அறையைக் காட்டினாள்.

புரிந்தும், புரியாமலும் மாலதி பார்க்க, செல்வியோ, முகமே மலர்ந்த பூவாகயிருக்க, அன்னையை நோக்கிக் கையை நீட்டினாள். வாய் பேச்சேயில்லை. கண்களில் ஆனந்த பாஷ்பம்.

“செல்வி.....” ஆச்சரியத்தோடு புரிந்துகொண்டவளாய் தலையை ஆட்டி வினவ, பதிலுக்கு செல்வியும் ஆமோதித்தாள். தன் சிரத்தை அசைக்க, அவளை அப்படியே கட்டிப்பிடித்து உச்சிமுகர்ந்தாள்.

“செல்வி.... அன்னையைப் பாத்தியா.... எப்படியிருந்தாங்க? என்ன சொன்னாங்க.... செல்வி.... சொல்லு... சொல்லேன்....”

‘‘அக்கா.... எனக்கு.... எனக்கு... என்ன சொல்றது, எப்படி சொல்றதுன்னே தெரியலே... நான் பூக்கள்ளாம் வந்ததும் அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் பார்த்து, கண்ணை மூடி வேண்டிக்கிட்டேன். இல்லை.... வேண்டிக்கக்கூட இல்லே.... கண்ணை மூடினதுமே, கண்ணெல்லாம் கூசும்படியா ஒரே வெளிச்சங்க்கா. எனக்கு கண்ணைத் தொறக்கணும் போலிருந்தது. ஆனா, கண்ணைத் தொறந்தா அந்த ஒளி என்னைவிட்டு விலகிடுமோன்னு தொறக்காமலேயேயிருந்தேங்க்கா. அப்புறம், தானாவே அந்த ஒளி குறைஞ்சிட்டே வந்துது. கண்ணைத் தொறந்து பார்த்தேங்க்கா. பார்த்தாக்க.... என்னன்னு சொல்வேங்க்கா.... அக்கா....”

மேலே பேசமுடியாமல் மகிழ்ச்சியிலும் அவள் கண்கள் கண்ணீரை வைரமணிகளாக உதிர்க்க.....

“அன்னையே வந்தாங்களா செல்வி....’’ ஆச்சரியத்தோடு மாலதி வினவ, ‘‘ஆமாங்க்கா.... எப்படி பளிச்சுனு.... அம்மா! எப்டி சொல்றதுன்னு தெரியலேக்கா. அன்னை மட்டுமில்லேக்கா, ஸ்ரீ அரவிந்தரும் கூடவே பளிச்சுனு இருந்தாரு. அன்னையோட முகத்துல ஏகத்துக்கும் ஒளி, பிரகா....சமாயிருக்குக்கா. என்னைப் பார்த்து சிரிச்சாங்க. ஆமாங்க்கா.... என்னைப் பார்த்து சிரிச்சாங்கக்கா, சிரிச்சாங்க....”

சொல்லிய செல்வி, மேலே பேசயியலாமல், தன்னையும் மறந்து, மாலதியைத் தழுவிக்கொண்டு கேவிக்கேவி அழுதாள்.

செல்வியின் அந்த அழுகை, மேனியில் மட்டுமல்ல; இதயத்திலிருந்து எழுந்த புளகாங்கிதத்தினால் ஏற்பட்ட அழுகை.

செல்வியின் முதுகைத் தடவி, உச்சி முகர்ந்து, அவள் தழுவலை ஏற்று, மனபேதம் எதுவுமின்றி, அன்னையைப் பார்த்த மாலதிக்கு,

‘அன்னையே.... உங்கள் கருணையே கருணை. நான் பேசக்கூட அருகதையற்றவள். ஒன்றுமறியாத, உங்களைப் பற்றி எதுவும் அறியாத, அந்த ஏழைப் பெண்ணுக்கு நீங்கள் தந்த ஒளியும், புன்னகையும்....



ம்மா.... நான் கேட்டே பரவசமாகின்றேனே.... அதைத் தாங்க இயலாமல், எதிர்பாராமல் உங்கள் தரிசனம், அவளின் சந்தோஷத்தை எல்லை மீறச் செய்து, பேச நா எழாமல், அதீதமான பரவசமும், எதிர்பாரா நிகழ்வுகளும், அவளை மயங்கியே விழச் செய்தது. இன்னும்கூட அவளிடம் அந்தப் பரவசமும், மகிழ்வும் நிலைத்திருக்கிறது. என்றென்றும் அவளுக்கு இதே நிலைமை நிலைத்திருக்க அருள்புரியுங்களம்மா.... அன்னையே சரணம்.... அன்னையே சரணம்.... அன்னையே சரணம்.... ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம, ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம, ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம’.

மனதை அமைதியாக்கிக்கொண்ட மாலதி, ‘‘செல்வி, காபியும், இட்லியும் சாப்டுட்டு வா. சீக்கிரமா, நல்ல பூவா பார்த்து அடுக்கணும். போய் சாப்டுட்டு வாம்மா...’’ சொல்லியபடியே, மூங்கில் தட்டுக்களில் பூக்களை ரகம்வாரியாகப் பிரித்து, சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

“அக்கா! தப்பா எடுத்துக்காதீங்க. பசியேயில்லேக்கா. காபி மட்டும் குடிச்சுட்டு வந்துடறேன், சரியா?”

அன்னையின் தரிசனம் அவளைப் பசியற்று, சந்தோஷத்தையே நிரப்பியிருந்தது.

சிம்பல் வைத்து முடித்தாயிற்று. சாம்பிராணியும் போட்டாயிற்று. ‘பிரே’ செய்தபின் எல்லாருமாய் சாப்பிட மணி பன்னிரெண்டைத் தாண்டியது.

செல்வி பத்துபாத்திரங்களை தேய்த்து, வீடு பெருக்கி, மீண்டும் துடைத்துவிட்டு வீட்டிற்குக் கிளம்பினாள்.

“செல்வி, சாயந்திரமா ஆறு மணிக்குள்ளே வா. இன்னிலேருந்து ஸ்ரீ அரவிந்தர் எழுதின ‘சாவித்ரி’ங்கற புத்தகத்துலேருந்து தினமும் ஒரு பக்கம் படிக்கலாம். அப்புறமா, பதினைந்து நிமிஷங்கள் தியானம் செஞ்சபிற்பாடு, உனக்குப் பாடம் சொல்லித்தரேன். வரேதானே....”

‘‘நிச்சியமாக்கா. கண்டிப்பா வரேன். நீங்க சொன்னாப்பலவே செய்யலாங்க்கா, வரவா?” சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

வீட்டிற்குப் போகும் வழியெல்லாம் உடம்பே பரபரத்தது; சந்தோஷித்தது; புளகிதத்தது. சரீரத்திலுள்ள அத்தனை நாடி, நரம்புகளிலும் அவளுள் பரவசத்தோடு நர்த்தனமாடியது போலவே

இருந்தது. போகும் பாதையும், மரமும், செடி, கொடிகளும் அவளைப் பார்த்து அசைந்து காற்றை வீசுவதுபோல் உணர்ந்தாள். அவைகளுக்கு மனமார நன்றி கூறினாள். காரணம், மாலதி பேச்சுவாக்கில் 'ஜடத்திற்கு உயிருண்டு' என்று சொல்லி விளக்கமளித்தது ஞாபகம் வர, தென்றலை அருமையாக வீசிய இந்த மரஞ்செடி, கொடிகள் உயிருள்ளவையல்லவா? அவைகளுக்கும் நான் 'நன்றி' கூற வேண்டாமா?எனத் தோன்றியதை நிறைவேற்றினாள்.

வீட்டுக்குள் நுழைந்தாள்.

"அக்கா! என்னக்கா... அவுங்க வூட்டாண்டையே நல்லா சோப்பு போட்டு குளிச்சியா.... பளிச்சினு இருக்கியே..." கணேசு கூறவும்,

ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் ஸ்தம்பித்துத்தான் போனாள் செல்வி. உடனே கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள்.

"ஆமாம்.... இன்னிக்குப் பளிச்சுனுதான் இருக்கேன். நம்ம சந்தோஷம், அன்னையோட பார்வையால, நமக்கு இந்தத் தெளிவான முகத்தைக் கொடுத்திருக்காங்கபோல. அன்னையே! என்னிக்கும் நீங்கதான் எனக்குத் துணையாக கூடவே இருக்கணும்மா.... தாயே...." மனமார வேண்டினாள் செல்வி.

➳➳➳➳

கணேசுக்கும், பொன்னிக்கும் வீட்டையும், சுற்றுப்புறத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தி, நல்லதனமாகவே கண்டித்துக் கூறினாள் செல்வி. அது மட்டுமா, அவரவர் புத்தகங்களையும் ஒழுங்காக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்; எப்போதும் அழுக்காகவோ, தலை கலைந்தோ, பரக்காவட்டி போல இருக்கக் கூடாது என்பதையும் தெளிவாகப் புரியும்படிக் கூறினாள்.

தலையை ஆட்டி, ஆட்டி இருவரும் ஆமோதித்தார்கள். அதேபோல ஒருவர் மறந்தாலும், 'ஏய், செல்விக்கா திட்டும். பாரு, புத்தகப்பையை இப்டி வீசிருக்கியே....' என்றும், 'தலைசீவாம, மொகம் கழுவாம, இப்டி பறட்டையாயிருக்கியே... செல்விக்கா வர நேரமாச்சு, பொன்னி'என கணேசும், ஒருவருக்கொருவர் தவற்றைக் கூறித் திருத்திக்கொண்டனர். ஆண்டாளுக்கோ வியப்பான வியப்பு. 'இது என்ன, நம்ம இந்தக் குட்டியூண்டு வீடு, வரவர சுத்தமாயிருக்குதே. செல்விதான் பெரியவ, பத்தா....வது படிக்கிறவ. நல்லா டிரஸ் செய்துக்குவா. சுத்தபத்தமாயிருப்பா. வயது வேறே அப்படி. ஆனா.... கொஞ்ச நாளா.... இந்தக் குட்டிங்களும் எப்பவும் நீட்டாயிருக்குதுங்களே. எடுத்ததை, எடுத்த எடத்துல வைக்குதுங்க. தலையை ஒழுங்கா சீவிக்குதுங்க. என்னாச்சு? நம்ம வீட்டுல மாயமந்திரம்போல நடக்குதே. இது என்னாடி அதிசயமாய் இருக்குதே....' முகவாயில் கை வைத்து அலமலந்துபோனவளுக்கு, நிஜமாகவே புரியவில்லைதான். ஆனால் மனசுக்குள் சந்தோஷம் பொங்கித்தான் வழிந்தது.

செல்வி வேலைகளை முடித்து, பாடமும் கற்றுக்கொண்டு, அன்னையையும் வேண்டி, வீட்டுக்குள் அப்போதுதான் நுழைந்தாள். தம்பி கணேசன் தன் பாடத்தைப் படித்துக்கொண்டிருக்க, பொன்னி துணிமணிகளை அழகாக நீவி, மடித்துக்கொண்டிருந்தாள். எல்லாமே வேலை செய்யும் வீட்டில் கொடுத்த துணிகள்தாம். ஆனாலும், அதையும் துவைத்து, காயப்போட்டு, மடித்து வைக்கும்போது, அந்தத் துணிகளுக்கும் ஒரு வனப்பு, ஓர் அந்தஸ்து வந்ததைப்போல் உணர்ந்தாள் செல்வி.

அன்னையை மனதுள் நிறுத்தி, 'உங்களையறிய வைத்த மாலதி அக்கா குடும்பமும், அறிந்துகொண்டு, என்னாலியன்றவரை என் குடும்பத்தினரும், நானும் தெரிந்த கோட்பாடுகளை கட்டுப்பாடோடு ஏற்கிறோம், நடக்கிறோம் அன்னையே.... அன்னையே சரணம், சரணமம்மா.....' பிரார்த்தித்தாள்.

அப்போதுதான் முருகேசு தள்ளாட்டத்துடனும், குப்பென்ற சாராய வாடையுடனும், தடுமாறியபடி வந்தான்.

முகம் சுளித்தாள் செல்வி. சட்டென தலையையாட்டி மறுத்தாள். மனதில் ஒரு திடமான உறுதி அவளுக்குள் பொங்கியெழுந்தது.

"அன்னையே! உங்களுடைய துணையின் பலத்தோடு, தள்ளாடிவரும் என் தகப்பனை நேராக, நேர்வழியில் நடக்கும்படிச் செய்வேன். என் குடும்பம் எந்தத் தீயசக்தியையும் அணுகவிடாது இருக்க அருள்புரியுங்கள் அம்மா. எனக்கு, அதற்குண்டான தைரியத்தையும், வழிமுறையையும் காட்டுங்கள் தாயே.... அன்னையே.... சரணம்.... அன்னையே சரணம்..."

நின்ற இடத்திலேயே நின்றபடி, மனதில் அன்னையை நிறுத்தி உருகி உருகி வேண்டி நின்றவளின் விழிகளிலிருந்து முத்துகள் சிதறின.

➳➳➳➳

“அக்கா! அக்கா! ஏதாவது வேலையிருக்காக்கா. நீங்க கொடுத்த ‘ஸம்’மையெல்லாம் போட்டுட்டேன். சரியான்னு பாக்கறீங்களாக்கா”.

“என்ன! போட்டுட்டியா... அட... சரி குடு. செக் பண்றேன். நோட்டைக் குடு...”

பார்த்த மாலதி வியந்துபோனாள். கணக்கில் ஒரே ஒரு தவறுதான் மற்றனவெல்லாம் தெளிவாக எழுதியிருந்தாள் செல்வி.

சந்தோஷம் கரைபுரண்டது மாலதிக்கு.

“செல்வி, நன்னா ‘பிக்கப்’ பண்ணியிருக்கே. ‘கீப் இட் அப்’. புரிஞ்சுதா. ‘போர்டு எக்ஸாம்’லே நீ ‘சென்டம்’ வாங்கணும். ப்ள்ஸ் டுவுல ஆரம்பத்து-லேருந்து சொல்லித்தரேன். நன்னா பண்ணுவே. இனிமே நான் உன்னோட இங்கிலீஷ்லதான் பேசப்போரேன். நீயும், அதுக்குப் பதில் இங்கிலீஷ்லேயேதான் தரணும், புரிஞ்சுதா....”

“அக்கா.... என்னக்கா நீங்க... என்னால... இங்கிலீஷா.... முடியுமா?” சொல்லியவள் உடனே, “தப்பு... நான் இப்டி பேசறது தப்பு. ஸாரிக்கா. அன்னைகிட்ட சொல்லப்போரேன். ஆமாங்க்கா, ‘அக்கா எனக்கு இங்கிலீஷ்ல பேசக் கத்துத் தரப்போறாங்க. நீங்க எனக்கு ‘ஹெல்ப்’ பண்ணணும்’னு வேண்டிகிட்டு கத்துகிட்டா, நல்லா பேசப்போரேன், அவ்வளவுதானே. சரிக்கா... எனக்கு பயமில்லே. வெட்கமும் படமாட்டேன். தப்பானா திருத்தறத்துக்கு நீங்க இருக்கீங்க. எனக்கு நல்ல ஞாபகசக்தி தரதுக்கு அன்னை இருக்காங்க. இதுக்குமேலே என்ன? என்னிக்குக்கா ஆரம்பிக்கலாம்?...”

கேட்ட செல்வியின் ஆர்வம், மாலதிக்கு வியப்பையும், அன்னை-யின்பால் அவள் வைத்திருக்கும் பக்தியும், நம்பிக்கையும் பார்த்து மெய்சிலிர்த்துத்தான்போனாள்.

“அக்கா! நான் ஒண்ணு கேப்பேன், தருவீங்களா?”

“கேளு செல்வி... என்ன வேணும்? தயங்காதே சொல்லு....”

“அக்கா.... அக்கா.... எங்க வீட்டுலயும்... அன்னை, ஸ்ரீ அரவிந்தர் ரெண்டு பேரையும் வச்சுக் கும்புடணும்னு ஆசையா இருக்குக்கா.... ஆனா... ஒண்ணாந்தேதி நிறைய்ய பூ வாங்கி, சிம்பல் வைக்கல்லாம் முடியாதேக்கா... பரவாயில்லையா? நான் ரொம்ப ஆசைப்படறேனாக்கா? தப்பில்லையே?”

கண்களில் ஆர்வம் மீதூற, அதே சமயம் தன்னுடைய இயலாமையை-



யும் உணர்ந்து தவிக்கும் அந்தச் சிறுமியின் இளம்இதயத்தை நினைத்துக் கண்களில் நிரம்பியதை, அப்படியே உள்ளுக்குள் தள்ளினாள் மாலதி.

“செல்வி, கண்டிப்பா, நிச்சியமா அன்னை, ஸ்ரீ அரவிந்தரை உங்க வீட்டுல வச்சு கும்பிடலாம். தப்பேயில்லேம்மா. அன்னைக்குப் பெரிய பங்களாவோ, மாடிவீடோதான் தேவைன்னு சொல்லவேயில்லையே. உன்னோட மனசுல வச்சு, நீ நினைச்சுண்டாகூட போறுமே. உன்னோட எப்போதுமே துணையா வருவாரே. நீ சிம்பல் வச்சு, பூ அலங்காரம் பண்ணினாத்தான் அருளைத் தருவேன்னு சொன்னாரா?.... இல்லையே. தட்டு நிறையவோ, வீடு நிறையவோ பூக்களை வச்சாத்தான் அருளை அள்ளித் தருவார்ங்கறதெல்லாம் இல்லை செல்வி. வழியில செடியில பார்த்து, அந்த ஒரு பூவைக்கூட நீ அன்போட, ஆசையோட, பக்தியோட அன்னைக்கு சமர்ப்பணம் பண்ணி வை செல்வி. அதுக்குண்டான பலனை நீயே உணர்ந்துப்பே. உதாரணமா கிருஷ்ண துலாபாரம் கதை தெரியுமா செல்வி?”

‘இல்லை, தெரியாது’ என்பதுபோலத் தலையசைத்தாள் செல்வி. “கிருஷ்ணரை பெரிய தராசுல உக்காத்தி வச்சு, அவங்க மனைவிங்கள்ள சத்தியபாமா, அகம்பாவத்தோட, தன்னோட நகைங்க அத்தனையையும் இன்னொரு தட்டுல வச்சாங்க. நகைங்கன்னா சும்மாயில்லே..... ஏகப்பட்டது. வைரம், வைடூரியம், முத்து, பவளம், கோமேதகம்னு, மரகதத்தோட அள்ளி வச்சாங்களாம். ம்ஹூம்.... தராசுத்தட்டு அப்படியே இருந்ததாம். கொஞ்சம்கூட அசையவேயில்லே. அப்போ, கிருஷ்ணரோட இன்னொரு மனைவி ருக்மிணி வந்தாங்களாம். ‘சரி, நீயும் வையி’ன்னு சொல்லி-யிருக்காங்க. அவங்க, கிருஷ்ணரையே மனசுல நினைச்சு, துளசிதளத்தை (இலையை) வச்சு, வேண்டியிருக்காங்க. அத்தனை குமிஞ்சிருக்கிற நகைகளுக்கு அசையாத தராசுத்தட்டு, இந்த ஒரு துளசிதளத்தை வச்சதும் சரிசமமா நின்னுதாம். உனக்கு இதுல என்ன புரிஞ்சுது.... சொல்லு, செல்வி”.

“ருக்மிணிம்மா, கிருஷ்ணரை மனசார பக்தியோட நினைச்சு கும்பிட்டு வச்ச துளசிக்கு அத்தனை சக்தியிருக்குன்னு புரியுதுக்கா. அதோட மனசார செய்யிற பக்திக்கு ஈடு, இணையில்லேன்னும் புரியுதுக்கா. நான் சொன்னது சரியாக்கா?” ஆவல் மின்னும் கண்களோடு, துடிப்போடு கேட்ட செல்வியை, ‘‘சபாஷ் செல்வி. இப்ப உனக்கு பக்திக்கும்,

மத்ததுக்கும் வித்தியாசம் தெரிஞ்சுதா? புரிஞ்சிண்டியா....”

“நல்லாவே புரிஞ்சுதுக்கா. இனிமே எனக்கு சந்தேகமே வராது. தெள்ளத்தெளிவா சொல்லிட்டீங்க. பக்தி, சமர்ப்பணம், சரணாகதி இந்த மூணுமே நம்ம மனசுலேருந்து வரணும். அதுதான் அன்னைக்குப் பிடித்தமானதுன்னு புரிஞ்சுகிட்டேங்க்கா....”

“இன்னிக்கு நீ வீட்டுக்குப் போறப்ப ஸ்ரீ அரவிந்தர், அன்னையை உங்க வீட்டுக்கு, உன்னோடயே கூட்டிக்கிட்டுப் போகலாம். நானும் வரட்டா?....” மாலதி கேட்கவும், செல்வி திக்குமுக்காடினாள் சந்தோஷத்-தில்.

‘‘அக்கா.... வாங்கக்கா.... வாங்க... நீங்களே எடம் பார்த்து, அன்னையையும், ஸ்ரீ அரவிந்தரையும் உக்கார வையுங்க. ரொம்ப சந்தோஷங்க்கா. எனக்கு என்ன பேசறதுன்னே புரியலேக்கா....”

மாலதியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு கேவினாள் செல்வி.

“சின்னஞ்சிறிய வீட்டில் சந்தோஷமாய் வந்து உட்கார்ந்தேவிட்டார்கள் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும். மாலதியே கொஞ்சம் பூக்களை வீட்டுத் தோட்டத்திலிருந்து எடுத்துவர அதை அடுக்கினார்கள். ஊதுவத்தியும் ஏற்றி, மாலதியும், செல்வியும் உட்கார, கணேசும், பொன்னியும் அமர்ந்தார்கள். மௌனம் அங்கு ஆட்சி செய்தது.

விழிப்பு வந்தது செல்விக்கு. அவள் அம்மா ஆண்டாளும் இமைகள் மூடி, பிரார்த்திப்பதைப் பார்த்தாள். மகிழ்ச்சியில் கண்கள் பனித்தன.

மாலதியும் கலைந்து எழ, பொன்னியும், கணேசும் கும்பிட்டு எழுந்தார்கள்.

அப்போதுதான் எழுந்த ஆண்டாளு, ‘‘இருங்க சின்னம்மா. காபித்தண்ணி வாங்கியாறட்டா” அன்போடு கேட்க, “இல்லே ஆண்டாளு, வீட்டுக்குப் போகணும், நாழியாச்சு. வரேம்மா.... டேய் கணேசா, நீயும், பொன்னியும் நல்லா படிங்க, புரிஞ்சுண்டீங்களா? சரி, ஆண்டாளு போய்ட்டு வரேம்மா’’. அவள் கிளம்பும்போதுதான் ஆண்டாள், ‘‘ஒரு நிமிஷத்துல வரேன், உக்காந்துக்குங்கம்மா’’.

விரைந்து வெளியே போன ஆண்டாளு, ஒரு பேப்பர் கவரைக் கொண்டு வந்து மாலதியின் கையில் தந்தாள்.



‘‘மாலுகண்ணு.... உனக்கு ஏதாவது தரணும்னு மனசுல தோணுனாலும், வீட்டுல இருப்பு சரியில்லே. அதான் கடையில வாங்கியாந்தேன். உக்காந்து தின்னுட்டுப் போங்கம்மா.... செல்வி.... சொல்லு செல்வி....” ஆண்டாளு கூறினதுமே அந்தக் கவரைப் பிரித்தாள். அதில் வேர்க்கடலை உருண்டைகள்.

மாலுவின் மனதில் குசேலர் வந்தார். கண்ணீர் ததும்பியது. வெடித்து வந்தது விம்மல். அடக்கினாள். அன்பு என்பது, யாரிடம், எப்போது வரும் என்பது நம்மாலேயே அறியமுடியலையே.... எத்தனை நல்ல இதயம்? எத்தனை வாஞ்சை.

அப்படியே அன்னையின் முன் வைத்தாள். கண்களை மூடித் திறந்தாள். கணேசன், பொன்னி, செல்வி, ஆண்டாளு என எல்லோருக்-கும் கொடுத்துத் தானும் உண்டாள். முருகேசுவுக்கும், செல்வியிடம் கொடுத்துவிட்டாள்.

“வரேம்மா.... எல்லாருக்கும் போய்ட்டு வரேன். வரட்டுமா செல்வி...”

முருகேசு என்றும்போல் தள்ளாட்டத்துடன் வந்தவன் கண்களில் அன்னையும், ஸ்ரீ அரவிந்தரும் பட்டனர்.

“ஏய்! யாருடி இந்தப் படத்தை மாட்டுனது? ....... இப்ப என்ன பண்றேன் பாரு..... சிறுக்கிங்க.... வூட்டுல.... இருக்காளுங்களா.... இல்லையா..... என்னென்னமோ.... வூட்டுக்குள்ள கொணாந்துடறாங்க....” கத்தினான்.

யாரும் வாய் திறக்காமல் மௌனமாயிருந்தனர்.

“இன்னாங்கடி... வாய் தொறக்கலேன்னா.... வுட்டுடுவேனா.... கண்ட, கண்டதையெல்லாம்....” மேலே அவன் வாய் தொறக்காதபடி, அவன் வாயைத் தன் கைகளால் பொத்தினாள் செல்வி.

வெறிபிடித்தவன்போல் அவள் கைகளைத் தூரத் தள்ளினான். படத்தை எடுத்து வீசும் எண்ணத்துடன் அருகே சென்றான்.

செல்வியும், ஆண்டாளும் பயந்துதான்போனார்கள். அவனை ஆளுக்கொரு கைபிடித்து, இழுத்து வெளிவராந்தாவில் தள்ளிவிடலாம் என்றே நினைத்தனர். அதற்குள் என்ன நடந்தது, ஏது நடந்தது என்று எவருக்கும் புரியாமல் நின்றார்கள். செல்வியின் வாய் ‘அன்னையே சரணம்’ என்று ஜபித்தபடி இருந்தது. கண்களிலிருந்து பிரவாகமாய்

கொட்டியது. எந்த நேரத்திலும் படத்தை என்ன செய்துவிடுவானோ என்கிற அச்சம் ஆண்டாளுவின் கண்களில் தெரிந்தது. ஆனால் செல்வியோ அப்படியே தூண்போல் அசைவில்லாமல் நின்றாள். இமைகள் மூடியிருந்தன. வாய் 'அன்னையே சரணம்' சொல்லியபடியிருந்தது. இரு கரங்களும் கூப்பியிருந்தன. மூடிய இமைகளிலிருந்து நீர்த்தாரைகள் வழிந்தபடியேயிருந்தன.

தள்ளாட்டத்துடன் அடியெடுத்து வைத்த முருகேசன், அப்படியே ஆடியபடியே நின்றான். கண்களைக் கசக்கியபடி, சிவந்த கண்களுடன் பார்வையைத் தீவிரமாக்கினான்.

இது என்ன மாயம்? அங்கு எந்தப் படமும் அவன் கண்களுக்குத் தெரியவில்லை. மீண்டும், மீண்டும் ஆடிய சரீரத்துடன் கண்களைக் கசக்கியபடி மூடி, மூடித் திறந்தபடி பார்த்தான். கண்களுக்கு எதுவுமே தெரியவில்லை.

"என்னாங்கடி.... என்னைய.... ஏமாத்துறீங்களா..... பொட்டை....றா...." அதற்கு மேல் அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தை என்றால், ஒரு வார்த்தைகூட எழவில்லை.

ஆண்டாளு ஒன்றும் புரியாமல் நின்றாள். உடல் நடுங்கியது. என்ன செய்யபோகிறானோ என்ற எண்ணத்தில் உறைந்துபோனாள்.

செல்வியோ.... அதே நிலையில், நின்ற இடத்தைவிட்டு அசையாமல், அன்னையே சரணம் கூறியபடியேயிருந்தாள்.

மீண்டும், மீண்டும் முருகேசு அன்னை, ஸ்ரீ அரவிந்தரிடம் போனான். இப்போது கண்ட பேச்சுக்களோ, குளறலோ, சத்தமோயில்லை. போனவன், ஏன் இப்படி? தன்னை யாரோ, தன்னையே பார்ப்பதுபோல் உணர்கிறானா? இல்லை என்ன ஆகிறது அவனுக்குள்? மீண்டும் பின்னே வருகிறான்! மறுபடி முன்னே போகிறான்.... மீண்டும் பின்னடைகிறான்.

மூச்சுக்காட்டாமல் நின்றாள் ஆண்டாளு. செல்வி இன்னும் அதே நிலையில்தான் இருந்தாள்.

மறுபடியும் ஒரு வேகத்தோடு போனவன், "அம்மா...." என்ற பெரிய கூக்குரலோடு நெடுஞ்சாண்கிடையாக விழுந்தவன் எழுந்திருக்கவே இல்லை.

பதறிப்போனாள் ஆண்டாளு.



செல்வி 'அம்மா' என்ற சத்தமான குரலைக் கேட்டு, விதிர்விதிர்த்து கண்களைத் திறந்தாள். அன்னை, ஸ்ரீ அரவிந்தரை வணங்கினாள். முருகேசு, அவர்கள் முன் கீழே வணங்குவதுபோல் விழுந்திருப்பதைப் பார்த்தாள். தாயின் மிரண்ட முகத்தைப் பார்த்தாள். சத்தம் செய்யாமல், ஜாடையிலேயே அம்மாவை அழைத்து, தண்ணீரைக் கொணர்ந்து அப்பாவின் முகத்தில் தெளித்தாள்.

சிலிர்த்தான் முருகேசன். ஆனால், எழுந்திருக்கவில்லை. மீண்டும் இன்னொரு முறை தெளித்தாள். புரண்டு எழுந்தவன் அன்னை, ஸ்ரீ அரவிந்தர் அருகில் வேகமாகச் சென்றான்.

ஆண்டாளுவின் முகத்தில் திகில். செல்வியோ பயமின்றி அன்னையைப் பார்த்தபடி நின்றாள்.

வேகமாகச் சென்ற முருகேசு, சட்டென நின்றான். ஸ்ரீ அரவிந்தரையும், அன்னையையுமே கண்கொட்டாமல் பார்த்தான். இரு கரங்களும் அவனுடைய ஆணையின்றியே சேர்ந்து குவிந்தன. அவனுடைய விழிகளிலிருந்து கண்ணீர் கொட்டியது. உதடுகள் துடித்தன. சரீரத்தில் ஏற்றியிருந்த போதை காணாமலே போனது.

"அம்மா! அம்மா! அம்மா!" உதடுகளிலிருந்து வேறு வார்த்தைகளே வரவில்லை.

மீண்டும் விழுந்து கும்பிட்டவன், புரண்டு, புரண்டு அழுதான். மனதிலுள்ள வேண்டாத கசடுகள் முழுவதும் கரையும்வரை அழுது புரண்டான் முருகேசன்.

கணவனின் அருகில் போக எத்தனித்த ஆண்டாளை, பார்வையா-லேயே தடுத்தாள் செல்வி. ஆனால் இதயத்தின் துடிப்பு என்னமோ, 'அன்னையே சரணத்தை'யும், 'ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய' என விடாமல் ஜபித்துக்கொண்டிருந்தது.

புரண்டு, புரண்டு அழுத முருகேசனைப் பார்க்கப் பார்க்கப் பரிதாபமாகயிருந்தது. இவர்களின் மனமும் கூடவே புரண்டது.

ஒருவிதமாக, முருகேசன் தானே எழுந்தான். தலைகுனிந்து ஆண்டாளினருகில் வந்து நின்றான்.

மீண்டும் அழுகையில் கரைந்தான். மனைவியின் கைகளைப் பிடித்தபடி, தன் முகத்தைப் பொதிந்து குலுங்கினான். கூடவே ஆண்டாளும் கலங்கினாள்.

பிறகு மகள் செல்வியினருகில் வந்தான் முருகேசு.

ஆடாமல், அசையாமல் நின்ற மகளை, ஆவேசத்தோடு தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டு, ''செல்வி, செல்விம்மா... கண்ணு... மன்னிச்சுடுடா..... கண்ணம்மா..... இத்தன நாளு.... நாளு.... நாளு.... குடிச்சு.... கண்ணுகுட்டிகளா.... தப்பு.... தப்பு.... பண்ணிட்டேனே.....ம்மா.... எத்தனை.... எத்தனை..... பாவம்.... பாவம்.... செஞ்சு....." மேலே பேச்சு வராமல் மயங்கி வீழ்ந்தான்.

குடியினால் பலகீனமடைந்திருந்த சரீரம், உணர்ச்சிவயப்பட்டதில், அதைத் தாங்கயியலாமலேயே மயங்கி வீழ்ந்தான்.

ஒரு பக்கம் அதிர்ச்சி; மறுபக்கம் ஆச்சரியம் என்று இனம்புரியாத கலவையான உணர்ச்சிகளில் சிக்கித்தவித்த தாயும், குழந்தைகளும் ஒருவரையொருவர் பிணைத்துக்கொண்டு அழுதார்கள். ஆனால், அதில் துளிக்கூட துக்கமில்லை. இதைத்தான் சந்தோஷ அழுகை என்பார்களோ.... எதிர்பாராத மகிழ்ச்சியில் கண்களில் வரும் துளிகள் இதுதானோ!...

பொன்னி குவளையில் நீரைக் கொணர்ந்து, தந்தையின் முகத்தில் தெளித்தாள். எழுந்து உட்கார்ந்த முருகேசு, மகளின் கையிலிருந்த குவளையை வாங்கித் தண்ணீரை கடகடவென்று குடித்தான்.

"செல்வி..... செல்வி...."

"அப்பா.... பசிக்குதா.... சாப்பிட ஏதாச்சும் கொண்டுவரவாப்பா..."

"வேணாம்மா... செல்வி.... இன்னைக்கு.... செல்வி... என்னாச்சுன்னு தெரியுமாம்மா.... செல்வி... நானு.... பாவிம்மா... இவுங்க... இவுங்க.... தெய்வம்னு தெரியலையே.... அம்மாடி..... என்னன்னு சொல்வேன்... தப்பு.... எந்தப்பு புரியுதும்மா...."

''அப்பா....'' செல்வி ஆச்சரியத்துடன் தகப்பனையே பார்த்தாள். சொல்லட்டும், என்ன நடந்ததுஎனத் தானாகவே சொல்லட்டும். மௌனமாகவேயிருந்தாள்.

"செல்வி! இந்த.... இந்தப் படத்தைப் போட்டு உடைக்கணும்னுதான் போனேம்மா.... அப்பத்தான் ஒரு அதிசயமே நடந்துபோச்சு கண்ணு....." மீண்டும் கண்களைத் துடைத்து, முகம் சிவக்கக் கூறினான் முருகேசு.

"அப்பா.... அப்பா.... என்னப்பா சொல்றீங்க?"

"செல்வி கண்ணு, நான் கிட்டே போனேனா.... அப்போ.... அப்போ...."



மேலே பேச முடியாமல், பேச்சு வாராமல், உடைந்துபோய் அழுதான் முருகேசு.

"அப்பா! சொல்லுங்கப்பா.... என்ன நடந்துச்சு சொல்லுங்க...."

"சொல்றேம்மா.... சொல்றேன்.... இன்னும் என்னால அந்தக் கண்கள, அந்தப் பார்வையை.... ம்..ஹூம்... முடியலே.... முடியலே...."

"அப்பா! கண்களா..... பார்வையா..... சொல்லுங்கப்பா..." அருகிலிருந்த குவளையிலிருந்து மடக்மடக்கென்று நீரைக் குடித்தான்.

''செல்வி, உங்களைத் திட்டிகிட்டே, படத்தைத் தூக்கி எறிஞ்சு வீசணுங்கற வெறியோட போனேனா.... அங்கே ரெண்டு படமும் இல்லேம்மா. ஆமாங்கரேன்.... ஆனா.... ரெண்டே ரெண்டு கண்ணுங்க மட்டும்..... அந்தம்மா முகமே மறைஞ்சுபோயி, பெரிசாகிட்டே வந்தது. என்னையே பாத்துது. அந்தக் கண்களோட வீர்யத்தை என்னால தாங்கமுடியலே கண்ணு... தாங்கமுடியலே.... பின்னுக்கு வந்தேன். எனக்கு ரொம்பவே பயமாயிருந்தது. ஆனா, திரும்பத் திரும்ப, அந்தக் கண்ணுங்க, நானு எந்தப் பக்கம் திரும்புனாலும் எம் முன்னாடியே நின்னுது செல்வி. என் ஒடம்புக்குள்ளே என்னென்னமோ நடக்குது. அந்த ரெண்டு கண்ணுங்களும் திடீர்னு... என்னைப் பார்த்தபடியே... பார்த்துகிட்டே வந்துதா..... தாங்காம..... அம்மா.... அம்மான்னு.... கத்தணும் போல தோணுச்சு. கண்ணைத் தொறந்தா அந்த அம்மாவோட கண்ணுங்கதான் தெரியுதேகண்டி, வேறே எதுவுமே..... தெரியலேம்மா.... ஆனா... மொதல்லே இருந்துச்சே, பயம்.... அது அப்பாலே இல்லேம்மா.... அப்புறமா, அந்தத் தெய்வங்களோட முகங்களும் பளிச்சுனு தெரிஞ்சுச்சு. ஒரே அளுகைதாம்மா பொங்கிப் பொங்கி வந்துச்சு....'' மேலே பேச முடியாமல் மீண்டும் கண்ணீர் பொங்கியது.

"வாங்கப்பா! கொஞ்சமாவது சாப்டாத்தான் தெம்பு வரும். அப்பா! மொதல்ல நல்லா குளிச்சிட்டு வாங்க. துவைச்ச உடுப்பைப் போட்டுகிட்டு சாப்பிட வாங்கப்பா...." இதமாக அழைத்தாள் செல்வி.

"ம்...ஹூம்.... வேணாம்மா.... எத்தினி வருசமா.... நான் குடிகாரனா-யிருந்து, குடும்பத்தைக் கவனிக்காம கொள்ளாம போட்ட ஆட்டம்..... கொஞ்சமா.... நஞ்சமா.... ஆண்டாளு.... எப்டி ஆண்டாளு சமாளிச்சே..... புரியலையே.... இவங்க யாரு? எந்த ஊரு சாமி? தெரியலையேம்மா.... ஆனா ஒண்ணு.... செல்வி.... அந்த ரெண்டு கண்ணுங்களும்.... அப்பப்பா....

இப்ப நெனச்சாக்கூட ஆண்டாளு.... என்னைய பெத்த ஆத்தா, சின்ன வயசுல வெளியில பசங்களோட சண்டை போட்டுகிட்டு வந்தா, என்னைய தண்டிப்பாங்களே.... அப்ப... அவங்க ரெண்டு கண்ணுங்களும்.... இப்டித்தானிருக்கும் ஆண்டாளு..... ஆமாம்.... இவங்க என் ஆத்தாளும், அப்பனும்தான். ஆமா செல்வி.... ஆமா...” மீண்டும் அழுதபடி விழுந்து கும்பிட்டான்.

“செல்வி, எங்கம்மா திட்ட மட்டுமில்லே... ஒரு தபா நல்லா சூடும் வச்சுது. இனிமே தப்பு செய்வியாடா.... செய்வியான்னு சொல்லிகிட்டே கரண்டிய காச்சி சூடு இளுத்துடுச்சு. அப்ப அம்மா கண்ணு எப்படி இருந்துச்சோ.... அப்படியே இருந்துது செல்வி... சத்தியமா அடிச்சு சொல்றேன், இவங்க என் அம்மாதான்.... அம்மாவேதான்...”

“சரி, சரி.... குளிச்சுட்டு வாங்கப்பா.... வாங்க....” செல்வி கூறவும், ஆண்டாளு, அவனை எழுப்பி அழைத்துப்போனாள். செல்வியும், பொன்னியுமாய், முருகேசு விழுந்து புரண்ட இடத்தை நன்கு துடைத்தனர். மறுபடியும் ஊதுவத்தி ஏற்றி வைத்த செல்வி, பொன்னி, கணேசனைக் கூப்பிட்டு, ‘‘அப்பா இனிமேல் எப்போதுமே குடிக்கக்கூடாதுஎன வேண்டிக்கலாம்.... சரியா... வாங்க” எனவும், மூன்று பேரும் அமர்ந்து, கண்களை மூடி, மனமிளகி பிரார்த்தித்தார்கள்.

அதே சமயம் குளித்துவிட்டு வந்த முருகேசனும், ஆண்டாளும் சந்தடியில்லாமல் அமர்ந்தனர்.

➼➼➼➼

நாட்கள் பறந்தன. முருகேசுவை அவனுடன் குடிக்கும் நண்பர்கள் கூப்பிட்டாலும், அவனுக்காகத் தாங்கள் செலவழித்துக் கொடுப்பதாகக் கூறினாலும், அவன் அசரவில்லை. எப்போது சபலம் ஏற்படுகிறதோ, நண்பர்கள் வற்புறுத்துகிறார்களோ.... அப்பொழுதெல்லாம் அவன் தன் கண்களை மூடிக்கொள்வான். மூடிய விழிகளில் அன்னையின் கண்கள், தன்னைப் பெற்றவளின் கண்களைப்போலவே தோன்றும். தன் தலையைத் தானே மறுப்பதுபோல் அசைப்பான். மீண்டும், மீண்டும் அந்தக் கண்களையே தன் மனக்கண்கள் முன் தோற்றுவிப்பான். இதயமோ இப்போதெல்லாம் ‘அன்னையே சரணம், அன்னையே சரணம்’ என்றுதான் துடித்தது.



‘இப்படிகூட நடக்குமா? இதென்ன சினிமாவா? டிராமாவா? உண்மையில் நடக்குமா?’ இத்தனை கேள்விகள் நம்முள் எழுவது இயல்பே. காரணம் வெகுசாதாரணமான மனிதர்களாகிய நமக்கு, நல்லதையும் சரி, அல்லாதவையும் சரி, உடனே ஏற்றுக்கொள்ளவோ, நம்பவோ மனம் உடன்படுவதில்லை என்பதே நிஜம். ஆனால்.....

‘அன்னை’ என்றால் ‘நம்பிக்கை’.
‘அன்னை’ என்றால் ‘தயாளம்’.
‘அன்னை’ என்றால் ‘அன்பு’.
‘அன்னை’ என்றால் ‘தூய்மை’.
‘அன்னை’ என்றால் ‘பொறுமை’.
‘அன்னை’ என்றால் ‘சத்தியம்’.
‘அன்னை’ என்றால் ‘அபரிமிதம்’.
‘அன்னை’ என்றால் ‘அருள்’.
‘அன்னை’ என்றால் ‘அதிர்ஷ்டம்’.
‘அன்னை’ என்றால் ‘பேரொளி’.
‘அன்னை’ என்றால் ‘ஐஸ்வர்யம்’.
‘அன்னை’ என்றால் ‘தென்றல்’.
‘அன்னை’ என்றால் ‘மஹேஸ்வரி’.
‘அன்னை’ என்றால் ‘மகாகாளி’.
‘அன்னை’ என்றால் ‘மகாலக்ஷ்மி’.
‘அன்னை’ என்றால் ‘மகாஸரஸ்வதி’.

இன்னும் அன்னையின் அவதாரங்களைப் பற்றிக் கூற எத்தனையோ உள்ளன. ஆனால் நாம் கடைபிடிப்பதோ... நம் தேவைக்கேற்ப, அந்தந்த நேரத்திற்குத் தீவிரமாக வேண்டுகிறோமே தவிர, எப்போதும் நாம் ‘அன்னையே சரணம்’ என்பதை நம் நாபிக்கமலத்திலிருந்து, இதயம் தாண்டி, நம் சரீரத்தில் பூராவுமாக பரவி, மனதிலிருந்து வெளிவருவதே உண்மையான, உசிதமான பிரார்த்தனையாகும். நம் மேனிசிலிர்க்கும்; மனம் புளகிக்கும்; எல்லையில்லா ஆனந்தம் பிரவாகமாகக் கண்களி-லிருந்து நீரைப் பெருக்கும்; நாமே எடையற்று இருப்போம்.

பணம், காசு இருந்தால்தான் தெய்வம் நம் அருகே வரும் என நினைப்பது மிகப்பெரிய தவறாகும்.

அன்னை, மனம் கனிந்த பக்திக்கும், நேர்மையான, மனம் திறந்த பிரார்த்தனைக்கும் நிச்சயமாக வருவார்.

*அடுத்த இதழில் முடியும்.....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் தன் பலனைப் பெற நெடுநாளாகிறது. பிராணனுடைய ஆசை உடன் பலன் தருகிறது. செயல் உடனே பூரண பலனை அளிக்கிறது.

***செயலுக்குப் பலன் கைமேல்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

எதை நாம் நாடுகிறோம் என்பது நாம் யார் என்பதை நிர்ணயிக்கும்.

***நாடுவதே நாம்.***

## ஸ்ரீ அரவிந்த சுடர்

அன்புக்குக் கட்டுப்படுவதைவிட மனிதன் அதிகாரத்திற்குக் கட்டுப்படுவான். உயர்ந்த மனிதன் தன்னைப் பிறர் அதிகாரத்திற்கும் அன்பால் கட்டுப்படுத்திக்கொள்வான்.

***அதிகாரத்திலும் அன்பைக் காண்பது அமிர்தமான இதயம் (Iswara Sakthi).***



# யோகசக்தி வாழ்வில் பலிக்கும் முறைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி.....)*

கர்மயோகி

இந்த முறைகள் அனைத்தும் ஏற்கனவே பல இடங்களில் விவரமாக எழுதப்பட்டவை என்பதால், அவற்றை இங்கு விவரிக்கவில்லை. சில குறிப்புகளை மட்டும் எழுதுகிறேன்.

1. **காரியம் கூடிவரும்பொழுது மேலே போக வேண்டும். Raise the rising aspiration. காரியம் கூடிவந்தவுடன் நாம் அனைத்தையும் மறந்து காரியத்தைப் பார்க்கிறோம். அந்த நேரம் நெஞ்சு ஆர்வமாக இருப்பது தெரியும். *அந்த ஆர்வம் உயரும்படி உள்ளே மனம் செயல்பட வேண்டும்.***
2. **எது உனக்குச் சிறந்த முறையோ அதை அளவுகடந்து பின்பற்று. Give the most to your best.**
3. **சைத்தியப்புருஷன் செயல்படும்படி நடப்பது சரி.**
   **இது பலிக்க சமர்ப்பணம் மறக்கக்கூடாது.**
4. **மௌனம் சேர்ந்து மனம் கனத்தால், அதைப் பேச அனுமதிக்க வேண்டும்.**
5. **உனக்குத் தெரிந்த அத்தனை கட்டுப்பாடுகளையும் (disciplines) மொத்தமாகப் பின்பற்ற வேண்டும்.**
6. **கூறும் குறையை நிறைவான நினைவாக மாற்றுதல்.**
7. **வெறுப்பின் பின் இறைவன் உள்ளதைக் கவனி.**
8. **உள்ளம் அடங்கினால் உலகை உள்ளே நாடு.**
9. **மௌனம் சிறந்து காட்சியாகும்.**
10. **காட்சியைக் கருதாதே - அதை ஞானமாக அனுமதி.**
11. **நீ ஜபிக்கும் மந்திரங்களின் மறைபொருளை அறிவது நல்லது.**
12. **அன்னையே உன் சரணாகதியை ஏற்றபின், அடுத்தது இல்லை.**
13. **அன்பரில் உள்ள அன்னைக்குச் சரணம் செய்வது.**
14. **எதைச் செய்தாலும், எவரும் அதை மேலும் உயர்த்த முடியாத அளவு**

செய்ய வேண்டும்.

15. உள்ளே போ; உலகம் உள்ளே தெரியும்வரை உள்ளே போ. உலகை வெளியில் காண்பதற்குப்பதிலாக, உள்ளே காண்பது உண்மையை அறிவது.

16. எதைச் செய்தாலும் அதில் நம் நல்ல அம்சங்கள் முழுவதும் வெளிப்படும்படிச் செய்வது (to positively exhaust yourself).

17. செயலற்றிருப்பதே சிறந்த செயல்என அறிவது.

18. செயலின் பின்னுள்ள மௌனத்தை எட்டுவது.

19. மௌனத்திற்குப் பின்னாலுள்ள மௌனத்தை அடைவது.

20. எட்டு தலைகீழ் (reversal) மாற்றத்தை அறிவது.

தோல்வியே வெற்றி; வலி ஆனந்தம்; எதிரி ஏற்றமிகு நண்பன்; அநியாயம் ஆண்டவனின் நியாயம்; நடப்பவை இறைவன் செயல் என்ற கருத்துகளை ஏற்பது.

21. துர்அதிர்ஷ்டம், பேராபத்து கொண்டுவருபவை வாய்ப்புஎன அறிந்து மகிழ்தல்.

22. முக்கியமான சிறிய நிகழ்ச்சிகளில் சிருஷ்டிச் சிறப்பை அறிவது (Small significant acts). சிறிய நிகழ்ச்சிகள் பெரிய காரியத்தைப் பூர்த்தி செய்வது உண்டு. அவை சொர்க்க வாயில். அவற்றை காணும் சூட்சுமம் தேவை.

23. நீ பாடும் சிறப்பான பாட்டை மேலும் சிறப்பாகப் பாட முயலுதல்.

24. சிறப்பாகச் செய்யும் சமையலை, மேலும் இனிப்பாக, சுவையாகச் செய்வது.

25. மனம் எழுப்பும் தவறுகளை, தவறாது நேர்படுத்துதல்.

26. அதிகபட்சம் நல்லெண்ணத்தை உற்பத்தி செய்வது.

27. நாட்டைப் பற்றிய உன் சிறந்த நோக்கத்தை மேலும் உயர்த்துவது.

28. பெற்றோர் குறைகளை நம் வாழ்வில் விலக்குவது.

29. வாழ்வை செயல்படச் செய்வது (Evoke a Life Response).

30. மனம் களைத்துப்போகும்வரை The Life Divineயைப் படிப்பது.

31. மரணபயத்தை விலக்குவது.



32. சமர்ப்பணத்தை ஜீவனின் சிகரத்தில் ஏற்பது.

33. எதையும் செய்ய முயல்வதைத் தவிர்ப்பது.

34. எரிச்சலைத் தவிர்ப்பது.

35. ஆழத்தில் ஜீவன் விழைவது கிடைக்கும்.

36. நினைவைக் கடந்து செல்வது.

37. ஆழ்ந்த உறுத்தலை ஆராய்ச்சியால் கரைப்பது அல்லது எரிச்சல்படாமல் இருந்து அழிப்பது.

38. உயர்ந்த வலிமையை உயர்த்துவது.

39. நடக்கும் என்பதால் நடத்திக் கொள்ளாதே.

40. மனத்தை அடிமையிலிருந்து விடுதலை செய்.

(உ.ம்.) பணத்திற்கு அடிமையாகாதே.

41. பிடி கொடுக்காமல் பேசுவதைத் தவிர்.

42. வெட்கப்படக்கூடிய காரியங்கள் மீது ஆசைப்படாதே.

43. ஆபத்தை அறைகூவி அழைக்காதே.

44. உள்ளத்தின் உண்மையை ஓரிழை உயர்த்து.

45. தவறு சரியென மாறும்பொழுது செய்ய மறுக்காதே.

கோபம், ரௌத்திரமாகும்பொழுது தடை செய்யாதே.

46. அனைவரும் அர்த்தமில்லாமல் போற்றுவதை நீயும் போற்றாதே.

47. உன் சுபாவத்தை சுட்டிக்காட்டும் உடற்குறை சிறியதானாலும் அதை அகற்ற முயல வேண்டும்.

48. வெட்கத்தைக் கடந்த மனநிலையை நாடு.

49. விரயத்தை விலக்கு.

50. அளவுகடந்த அர்த்தமற்ற விரயத்திற்கு அர்த்தம் உண்டென அறியலாம்.

51. நமக்குள்ள திறமையை நாம் மறக்கும் அளவுக்குப் பாராட்டக் கூடாது.

52. சுயநலமிக்குச் சேவை செய்யாதே.

53. முழுச்சுயநலமிக்கு முழுமையாக ஆதரவு கொடு.

**54.** பெருமை தரும் அடக்கம் பெரியது.

**55.** எதைக் கெட்டியாகப் பிடித்திருக்கிறோமோ, அதை விட்டுக்கொடுக்க வேண்டும்.

**56.** *பரம எதிரியின் வாயால் நல்ல பெயர் வாங்க வேண்டும்.*

**57.** துரோகத்தைப் போற்று.

**58.** பேயான மனிதனுக்கு அடிமையாகச் சேவகம் செய்.

**59.** நல்லவரையும், பொல்லாதவரையும் சமமாக மனத்தில் பாராட்டு.

**60.** நன்றியறிதல் உடலில் புல்லரிக்க வேண்டும்.

**61.** வளரும் ஆன்மாவை வளர்க்க முயல வேண்டும்.

**62.** அவமானத்தைப் பிரியமாக ஏற்க வேண்டும்.

**63.** முறையென எதையும் தேடாதே.

**64.** பரபரப்பாக வேலை செய்யும்பொழுது அமைதியாக இரு.

**65.** ஒரு சட்டத்தை (discipline) எடுத்துப் பூரணமாகப் பின்பற்று.

**66.** சக்தி, வீர்யம், தெய்வப் பிரகிருதியைக் கடந்த சிரத்தையை (நம்பிக்கை) நாடு.

**67.** வாழ்வின் அறிகுறிகள் கூறுவதைக் கவனி.

**68.** தவறுஎனத் தெரிந்ததைச் செய்யத் துடிக்காதே.

**69.** கடந்ததை வலியுறுத்தும் பழக்கம் ஒன்றைக் கைவிடு.

**70.** அபிப்பிராயம் என்பதை அழிக்க முயல வேண்டும்.

**71.** சரிஎன பலமாக நீ அறிவதை ஆழத்திற்குக் கொண்டு போ.

**72.** யாரால் உனக்கு அழிவு வருமோ அவரிடமிருந்து வரும் பெரும்பரிசை மறுத்துவிடு.

**73.** பிறருக்குச் செய்த தவறுகளில் ஒன்றைப் பூரணமாகப் பாதிக்கப்பட்டவர் முழு திருப்தியடையும்வரை செய்.

**74.** செல்லம் கொடுப்பதைச் செல்லமாக வளர்த்துக்கொள்.

**75.** மன்னிக்க முடியாத குற்றத்தை ஏற்றுப் போற்று.



**76.** அன்று மயங்கிய கவர்ச்சியில் ஜீவனில்லைஎன இன்று உணர முடியுமா?

**77.** அழைப்பு ஆனந்தம் தர வேண்டும் - *அது ஆன்மீக நன்றியறிதல்.* நினைவுக்கும் அழைப்பின் மகத்துவமுண்டு.

**78.** யாருக்கு என்ன வேலை செய்தால் தடை விலகி வாயில் திறக்கும்எனப் பார்.

*அச்செயலுக்குரிய நேரத்தைக் கண்டுபிடி.*

**79.** உனக்குத் தாங்காதவற்றை (sensitivity) அறிவதுபோல் வாழ்வை அறிய வேண்டும்.

**80.** அழைப்பு ஆழத்தில் ஆனந்த உணர்வு கொடுப்பதைக் கவனி.

**81.** எவரையும் அவருக்குத் தாங்காத இடத்தில் (sensitivity) தொடும்படிப் பேசாதே.

**82.** சிறு தவறு, குறை ஏற்படாவண்ணம் 24 மணி நேரம் (3 நாள் நல்லது) போக வேண்டும்.

**83.** 3 மணி நேரம் மனத்தில் ஒரு குறையும் (complaint) வராதபடித் தடுத்து விடு.

**84.** பிறர் கர்மத்திற்குக் கருவியாகக் கூடாது. 1 வாரம் அல்லது 1 மாதம் அதைக் கடைப்பிடிக்க வேண்டும்.

**85.** முடிவைத் திட்டவட்டமாக எடு (1 வாரம்).

**86.** கடன் பெறுவதைச் சில காலம் தள்ளி வை.

**87.** முனைந்து உதவி செய்யப் போவதை சில காலம் ஒத்திப்போடு.

**88.** என்ன விஷயம்என அறியும் ஆவலை (curiosity) மறுத்துவிடு (1 மாதம்).

**89.** பிறருக்கு நல்லது செய்ய நினைப்பது ஆனந்தம் தர வேண்டும்.

**90.** அளவுக்கு மீறிச் சாப்பிடாதே.

**91.** பொங்கிவரும் சந்தோஷம் இயல்பாக வேண்டும்.

**92.** கோள் சொல்லக் கூடாது.

**93.** காணிக்கை.

தொடரும்....

❀❀❀

## அன்பர் கடிதம்

**மின்சார பில்:**

இருளே அறியாத ஜோதிமயமான சத்திய லோகமாகிய பொன்னுலகை விட்டு அஞ்ஞான இருள் நிறைந்த பூலோகத்திற்கு வந்து, இருளை விலக்கி, ஒளிமயமாக்க வந்திருக்கிறார் அன்னை. இந்த அன்னையால் முடியாதது பூலோகத்திலும் சரி, மற்ற லோகங்களிலும் சரி, எதுவுமே இல்லை. இப்படிப்பட்ட அன்னை நமக்குக் கிடைத்தது பல பிறவிகளாக நாம் சேர்த்து வைத்த புண்ணியம்தான்.

அன்னை பூலோகத்தின் இருளை விலக்க மின்னலாக வந்துள்ளார் என்பதை நாம் உணர வேண்டும். அன்னையை நம்பினால் அவர் நமக்கு உதவத் தயாராக இருக்கிறார். அவருடைய சக்தியை உணர்ந்து, 'நம் அன்னையால் எதுவும் முடியும்' என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டால் எதையும் சாதிக்கலாம்.

எனக்குத் தெரிந்தவரையில் தியான மையத்தில் மின்கட்டணக் கணக்குகளின் விபரம் 3244/2330/2452/2087/2087/2087/1600/1350/ 617. அதிகமாக வரும்போது 4000க்குப் பக்கமாக வருகிறதே, நாலாயிரத்தை எட்டிப் பிடித்துவிடும் போலிருக்கிறதே, என்ன செய்வதுஎனப் பேசிக் கொண்டனர். அதோடு மறந்துவிட்டனர். எனக்கு மட்டும் நம்பிக்கை உண்டு மதர் மேல். மின்சார பில் நினைவுக்கு வரும்பொழுதெல்லாம் என் மனம் வருத்தப்பட்டது. வருத்தப்பட்டுப் பயனில்லை, அன்னையிடம் கேட்போம்என மனதை மாற்றி, மனதை அன்னை பக்கம் திருப்பி, அன்னையால் எதுவும் முடியும் என்ற வாக்கியத்தை நினைவுக்கு கொண்டுவரப் பார்த்தால், அந்த வாக்கியம் மனதில் மறைந்திருந்தது. அதைப் புதுப்பித்து அன்னையை கேட்கலாம்என அன்னை பக்கம் போகும்போது சமூகப் பழக்கம் முன்வந்து நின்று, 'நீ எப்படி வெற்றி பெறுவாய்? 40 பேரும் முடியாது என்று விட்டுவிட்டதை உன் ஒருவனால் எப்படி முடியும்?' 'சமூக பழக்கமே அப்படி ஒரு பக்கமாக உட்காரு. அன்னையை சாதாரணத் தெய்வம் போல் நினைத்தாயா? காலத்தைக் கடந்தவர், அவரால் முடியும்'என நானும் காலத்தை கடந்த நிலைக்குப் போய், 'அம்மா! மற்றவர்களைப் பற்றிய நினைவு தடை என்றால், தடைகளை உடைக்கும் சக்தியல்லவா? தடைகளை உடைத்து அருள் புரியுங்கள்'. 3850 ரூபாய் பில் 1000 ரூபாய் குறைந்து 2850 ரூபாயாக வந்தது. 'குறைத்தால் போதும், எனக்குப் பெரிய வெற்றி', சொல்லிவிட்டு வருஷகணக்கில் மறந்துவிட்டேன்.



7.4.2006 அன்று மின்சார பில் கட்ட பணம் மின் கட்டண அட்டையில் வைத்து வைத்திருந்தார்கள். 'என்ன இது, மின் கட்டணம் நிறைய வரும். பணம் என்ன குறைவாக வைத்திருக்கிறார்கள், பார்க்கலாம்' என எடுத்துப் பார்த்தேன். நம்பமுடியாத சந்தோஷம் எனக்காகக் காத்திருந்தது. பணத்தை எண்ணிப் பார்த்தேன்; 617 ரூபாய் இருந்தது. அட்டையில் பார்த்தேன்; 130 யூனிட்டுக்கு 617 என எழுதியிருந்தது. அதைப் பார்த்ததுமே, 'அம்மா! நன்றி. இந்தக் குழந்தையின் கற்பனையை நிஜமாக்கிவிட்டீர்கள். குழந்தை கேட்டதோ 1000. அம்மா கொடுத்ததோ 3233. இந்த குழந்தையின் ஆழ்மனதில் இருந்ததைக் கண்டு, அதையும் நிறைவேற்றிவிட்டீர்கள்', மனமும், உடலும் பறப்பதுபோல் உணர்வு ஏற்பட்டது. 'இத்தனைத் தடைகளையும் உடைத்து, இந்தப் பிஞ்சுக்குழந்தையின் ஆழ்மனதின் எண்ணத்தை நிறைவேற்றிவிட்டீர்கள். உங்களை என்ன வார்த்தை சொல்லி பாராட்டுவதுஎன எனக்கு வார்த்தைகள் தெரியவில்லை. அம்மான்னா அம்மாதான்!

*நீ என்னை வார்த்தைகளால் புகழவேண்டாம். என் மேல் நம்பிக்கையும், எனக்காக எதையும் விடும் தைரியமும் இருந்தால் போதும். உன்னுடன் இருப்பேன்.*

அம்மா எனக்கு இப்படியொரு பாக்கியம் கிடைத்ததற்கு நன்றியுடன் இருப்பேன்.

அம்மாவிடம் இன்னொரு விஷயம் தெரிஞ்சிக்கனும். அம்மா பணம் ஆயிரம் குறைக்கச் சொன்னேன். மூவாயிரத்துக்கும் அதிகமாக குறைத்துவிட்டீர்கள். ஆனால் மின் விளக்குகள் முதலில் இருந்த அனைத்தும் இருக்கின்றன; ஃபேன்கள் அனைத்தும் இருக்கின்றன; எவையும் குறையவில்லை; ஃபிரிஜ், ஏர்கூலர் இருக்கிறது; இத்தனையும்

மின்சாரத்தைச் சாப்பிட்டு, அதனதன் வேலையைச் செய்கின்றன. ஆனால் யூனிட் குறைந்திருக்கிறது. இது எப்படிஎன எனக்குத் தெரியுது. பிரம்ம சக்தியை பிரம்மம் எடுத்தால் தான் வளரும்.

இந்தக் கட்டுரையை படிப்பவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த வரி எழுதுகிறேன்: காலத்தைக் கடந்த நிலையில் நாம் இருந்தால் இது நடக்கும். காலத்தை கடக்க என் மனதை அன்னை பக்கம் திருப்பினேன். நாம் அன்னையின் பக்கம் இருந்தால் நம் விருப்பம் நிறைவேறுகிறது என்பது நூற்றுக்கு நூறு வெற்றி மட்டும் நமக்குண்டு. எனக்கு உள்ளுக்குள் ஓர் ஆசை இருந்தது. 3000 குறைத்து மீதியை கட்டும்படி செய்யுங்களனக் கேட்க தோன்றியது. எப்படிக் கேட்பது? இவ்வளவு ஆசையாஎன நினைப்பார்களே என்ற வெட்கம் வந்து தடுத்தது. அந்த வார்த்தையை வெளிவிடாமல் உள்ளுக்கு அனுப்பிவிட்டேன். அந்த எண்ணம் ஆன்மாவை அனந்த அற்புத மலராக மலர்ந்து மனம் மணம் வீசியது. இதற்குப் பொருள் உள்ளிருக்கும் எண்ணத்தை மலரச் செய்தார். மூவாயிரத்துக்கும் அதிகமாகவே குறைத்துவிட்டார்.

3850 ரூபாய் பில் வரும்போது இருந்த மின் சாதனங்கள்தாம் இப்போதும் இருக்கின்றன. அதே மின்சாரம்தான் செலவாகுது.

மின்சாரக் கணக்கு:

யூனிட்டுகளின் கணக்கு: 540/390/410/350/350/350/300/280/230/130. ஒவ்வொரு முறை கணக்கெடுக்கும்போதும் குறைந்துகொண்டே வந்து 130 யூனிட்டுகள் கணக்கில் வந்தது. அன்னை என்ன என்ன அற்புதங்கள் செய்கிறார். அற்புதங்கள் செய்து நம்மை சந்தோஷத்தில் மூழ்க்கடித்து, திக்குமுக்காட வைப்பதே அன்னை விளையாட்டு. 540 யூனிட்டை 410 யூனிட்டாக குறைத்து, 130 யூனிட்டாக்கிவிட்டார்கள், நன்றி!

உங்களுடைய விளையாட்டுகள் அற்புதம். தினமும் என்னை உங்கள் விளையாட்டில் சேர்த்துக்கொண்டு வெற்றிக்கு அற்புதத்தைப் பரிசாகக் கொடுங்கள்.

❀❀❀





## P.68 The burden of a long unmeaning tale.

**நீண்ட நெடிய அர்த்தமற்ற புராணத்தின் அவதி.**

- ✡ **புதிர் விளங்கவில்லை. இருளான ஜடம் ஒளித்துள்ளது.**
- ✡ **வாயிலில், வாயிலின் அடியில், தெய்வ இரகஸ்யம் புதைந்துள்ளது.**
- ✡ **அழியாத ஆத்மாவை ஒளித்து வைத்த உடல்.**
- ✡ **ஊர் பேரில்லாதவன் ஒளிந்துள்ள சக்தியை உடையவன்.**
- ✡ **ஜடரூபம், எண்ணத்தைக் கடந்த நோக்கம்.**
- ✡ **கற்பனையைக் கடந்த ஆபத்து.**
- ✡ **எல்லாம்வல்ல எதுவும் தெரிய முடியாத சக்தி.**
- ✡ **ரூபமே தன்னையறியாமல் அவன் உறைகிறான்.**
- ✡ **தடமறியாத மனம் தன்னையறியாத திரை.**
- ✡ **எண்ணம் உலவும் உலகில் அலையும் மனிதன்.**
- ✡ **தவறு நிறைந்த சத்தியத்தில் தவழும் மனிதன்.**
- ✡ **சிகரத்தில் விவேகத்தைத் தேடும் மனிதன்.**
- ✡ **தன்னையே தேடுபவனின் மறதி போன்ற நிலை.**
- ✡ **இழந்த உள்ளொளியைத் தேடுபவன்போல.**
- ✡ **புது இடத்திற்கு வந்த வழிப்போக்கன்போல.**
- ✡ **தெரியாத வீட்டை நோக்கி அவன் செல்கிறான்.**
- ✡ **சத்தியம் தன் சத்தியத்தைத் தேடுகிறது.**
- ✡ **ஆடுபவன் ஆட்டமானான்.**
- ✡ **சிந்திப்பவன் சிந்தனையானான்.**
- ✡ **அனேகன் மௌனமான ஏகனானான்.**
- ✡ **பிரபஞ்ச சக்தியின் சின்னம்.**
- ✡ **ஜடமான ஜீவனுள்ள சின்னங்கள்.**

- ✡ நிகழ்ச்சிகளெனும் சித்ரகூடம்.
- ✡ இடைவிடாத அதிசயத்தை ஆழ்ந்து தேடினான்.
- ✡ ஆயிரம் புதிருக்கு அவன் கண்டுபிடித்த விடை.
- ✡ அனைத்தையும் அறியும் ஆத்மாவின் ஓர் ஒளிக்கதிர்.
- ✡ சக்திவாய்ந்த தம்பதியுடன் செய்த ஒப்பந்தம்.
- ✡ அவளுக்காக அவளுடன் இணைந்தான்.
- ✡ காலத்தின் காலத்தைக் கடந்த கதியைப் பின்பற்றினான்.
- ✡ அவள் வினோதமான குணத்தின் விபரீத நாடகம்.
- ✡ திரையிட்ட இலட்சியத்தின் அதிர்ச்சியும், ஆச்சரியமும்.
- ✡ அவள் கோணல் கோலத்தின் ஏற்றமும், தாழ்வும்.

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிறுவயதிலும் பெரும்பாலோர்க்கு ஆர்வமிருப்பதில்லை. உயர்ந்த ஆசையை இலட்சியமென பலர் கருதுகின்றனர். இளமை தாண்டினால் பலருக்கு ஆசையும் இருப்பதில்லை. நடுத்தர வயது அடைந்தபின் மனம் அசை போடுவதை மட்டும் மேற்கொள்ளும். அது வளர்ந்து, வயது முதிர்ந்தபின் மனிதனைப் பிடித்து உலுக்கும்.

***அசை போடும் மனிதன் ஜீவனற்றவன்.***

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

## அமெரிக்காவில் வினோபா பவே

மகாத்மா காந்திஜீயின் பிரதம சிஷ்யராக வாழ்வை நடத்திய வினோபா, பூதான் இயக்கம் நடத்தினார். இந்தியா முழுவதும் பாதயாத்திரை செய்தார். அவருக்குக் கொள்ளைக்காரர்களைப் பற்றிய நினைவு மேலிட்டது. அவர்களை ராஜஸ்தான் போன்ற இடங்களில் சந்தித்தார்.

***அவர்களை, போலீஸிடம் சரணடையச் சொன்னார். அவர் புத்திமதியை ஏற்று அவர்களும் அப்படியே செய்தனர்.***

சரணடைந்தால் சட்டம் மன்னிக்கும்என அவர் கூறவில்லை. "சட்டப்படி உங்களுக்குரிய தண்டனையை ஏற்பது சரி" என்றார். அவருக்குப் பின்னால் ஜெயப்பிரகாஷ் நாராயணனும் அதைச் செய்தார்.

***இருண்ட மனமுடைய கொலைகாரனுக்கும் நியாய மனப்பான்மை உண்டு என்பதை வினோபா கண்டார். கொலைகாரர்கள், கொள்ளைக்காரர்கள் சரணடைந்தனர்.***

**இந்த அதிசயம் ஆன்மீக நாடான இந்தியாவில்தான் நடக்கும் என்று நினைக்கலாம்.**

சமீப காலத்தில் இதே நிகழ்ச்சி அமெரிக்காவில் நடந்தது. அதைச் சாதித்தது ஓர் இளம்பெண். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளிவந்த செய்தியைக் கீழே தருகிறேன்:

மிஸ் ஸ்மித் என்ற பெண் இரவு 2 மணிக்கு அருகிலுள்ள கடையில் சிகரெட் வாங்கிக்கொண்டு வீடு திரும்பினாள். துப்பாக்கியை அவள் இடுப்பில் பதித்து, "உயிர் மீது ஆசை இருந்தால் சொல்வதைச் செய்" என்றான் நிக்கோலஸ் என்பவன். நிக்கோலஸ் பயித்தியம் போன்ற கொலைகாரன். போலீஸ் அவனுக்காக ஊர் முழுவதும் வலை விரித்துத் தேடுகிறது. 26 வயது ஸ்மித் நிலைகுலையவில்லை; பதட்டப்படவில்லை; உயிருக்காகக் கெஞ்சவில்லை; மரணம் அவளுக்குப் பயம் தரவில்லை.

அவளுக்குக் கடவுள் நினைவு வந்தது. கடவுளைப் பற்றி

*Contd. on the back cover.....*

## அமெரிக்காவில் வினோபா பவே

*Contd. from front cover.....*

இக்கயவனிடம் பேசத் தோன்றியது. கயவன் மனம் கடவுளை அறியாது. அதைக் கேட்டு அசையாது. அவள் தைரியசாலி. அந்த நிலையில் நிதானமாகப் பேச மரண தைரியம் தேவை. பேச நாக்குழறும் நிலையில் அவலமான மனிதன் ஆர்ப்பாட்டமாக செயல்படும்பொழுது, அவள் அசையாமல், அவன் செய்கையைக் கருதாமல் பேசினாள்:

☆ **'பிறருக்குச் செய்யும் சேவை இறைவனுக்குச் செய்வது'.**

**'பெருந்தன்மை என்பது அதிகாரம், அந்தஸ்து'.**

**'சுயநலமான நம் உலகில் 'எனக்கு முதலில்' என்பது விரும்பத்தக்கதல்ல'**

என்று அறிவுரை கூறினாள். நிக்கோலஸ் மேலும் கொடுமைப்படுத்தாது, அவள் கூறியதைக் கேட்டான். கேட்டவன்,

☆ *"நிறுத்து. நீ படித்த இந்த புத்தகத்தை தயவுசெய்து மீண்டும் ஒருமுறை எனக்குப் படித்துக்காட்டு" என்றான்.*

அவள் மேலும் படித்தாள்:

☆ **"கடவுள் ஒரு காரணத்திற்காக உன்னைப் படைத்துள்ளார். உன் திறமைகளை நீ போற்று. இல்லாததைப் பற்றிக் கவலைப்படாதே"**

என்று படித்தவள், அவனை நோக்கி,

☆ *"என் வீட்டினுள் நீ வந்ததற்கு ஒரு காரணம் உண்டு. நீ போலீஸிடமிருந்து தப்பியது ஆச்சர்யமன்றோ. நீ ஜெயிலுக்குப் போய் அனைவரிடமும் இறைவனின் உபதேசத்தைக் கூற வேண்டும். கடவுள் பல ஆத்மாக்களைக் காப்பாற்ற வேண்டும்" என்றாள்.*

☆ *அவன், அவளை "என்னை நீ ஜெயிலில் வந்து சந்திப்பாயா?" எனக் கேட்டுவிட்டு, சூழ்ந்துவரும் போலீஸிடம் சண்டையிடாமல் சமாதானமாகச் சரணடைந்தான்.*

☆ *ஸ்மித் பிரபலமான பிரமுகரானாள்.*

❀❀❀